# தொழிலும் புலமையும்

செந்தமிழ்ச்செல்வர்
பேராசிரியர்:
**வித்துவான் பாலூர் கண்ணப்ப முதலியார், M.A., B.O.L.**
தமிழ்த்துறைத் தலைவர்
**புதுக்கல்லூரி, சென்னை-14.**

வெளியிட்டவர்:
**சி. சுப்பையய செட்டி & கம்பெனி**
**பப்ளிஷர், திருவல்லிக்கேணி, சென்னை-5**

உரிமை ஆசிரியருக்கே] 1963 [விலை ரூபாய் ஒன்று

முதற்பதிப்பு : 1955
இரண்டாம் பதிப்பு : 1956
மூன்றும் பதிப்பு : 1963

Approved by the T. B. C.
—Part I B Supplement of 4—4—1956.

இது போது மூன்றும் பதிப்பாக வெளி வரு
நூலில் தொழில் புரிந்துகொண்டே புலமையு
கிருந்த பெண்பாற்புலவர் ஒருவரது வரலாறும் இ
கப்பட்டுள்ளது.

Printed at The Midland Printers, Vepery, Madr

# முன்னுரை

மக்கள் தங்கள் வாழ்க்கையைச் செம்மையாக நடத்துதற்குத் தங்கள் மனம் விரும்பும் பல்வேறு தொழில்களை மேற்கொண்டு வாழ்ந்து வந்தார்கள்; வாழ்ந்தும் வருகின்றார்கள். அவ்வாறு மேற்கொண்ட தொழிலுடன், கவி பாடும் ஆற்றலும் பெற்றுக் கண்ணியமாய் வாழ்ந்த புலவர் பலர் நம் தமிழகத்தில் இருந்திருக்கின்னர். இங்ஙனம் தொழிலும் புலமையும் கொண்டு திகழ்ந்த பெரியோர்களைப் பற்றி எழுதப்பட்டதனால் இந்நூல் **'தொழிலும் புலமையும்'** என்னும் பெயரினைத் தாங்கியுள்ளது. இந்நூல் புறநானூறு என்னும் நூலையே பெரிதும் அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

இத்தகைய கருத்துக்களை மாணவ உலகம் பயிலுமேல், அது சிறந்த வாழ்வினைப் பெறும் என்பதில் ஐயம் இல்லை.


**' அம்மையப்பர் அகம் '**
77, அவதானம் பாப்பையர் வீதி,
சூளை, சென்னை—7
1—9—55

**ஆசிரியர்**

# பொருளடக்கம்


| எண் | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் | ... | 1 |
| 2. | உறையூர் மருத்துவன் தாமோதரனார் | ... | 13 |
| 3. | கணியன் பூங்குன்றனார் | ... | 22 |
| 4. | மதுரைத் தமிழக் கூத்தனார் | ... | 29 |
| 5. | வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார் | ... | 36 |
| 6. | வடம வண்ணக்கன் பேரி சாத்தனார் | ... | 41 |
| 7. | வடம வண்ணக்கன் தாமோதரனார் | ... | 48 |
| 8. | உறையூர் இளம்பொன் வாணிகனார் | ... | 54 |
| 9. | தண்காற்பூட்கொல்லனார் | ... | 60 |
| 10. | மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் | ... | 66 |
| 11. | பக்குடுக்கை நன்கணியார் | ... | 71 |
| 12. | நெடும்பல்லியத்தனார் | ... | 76 |
| 13. | மதுரை ஓலைக்கடைக் கண்ணம் புகுந்தாராயத்தனார் | ... | 82 |
| 14. | ஆலியார் | ... | 88 |
| 15. | காவற்பெண்டு | ... | 91 |
| | பயிற்சி வினாக்கள் | ... | 109 |

# தொழிலும் புலமையும்

---

## 1. மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்

மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் சங்ககாலச் சான்றோருள் பெருமதிப்புப் பெற்ற பெருந்தகையாராவர். இவர் பெரும்புலவராயும், பெருவணிகராயும் திகழ்ந்தவர். இவரது இயற் பெயர் **சாத்தனார்** என்பது. ஆனால், இவருடைய் பெயர்க்கு முன் உள்ள அடைமொழிகளால் பல அரிய குறிப்புக்கள் நமக்கு அறிய வருகின்றன. இப்புலவர் வணிகர் தொழிலை மேற்கொண்டு இருந்தவர் என்பதை இவர் பெயர்க்குமுன் **வாணிகன்** என்னும் அடைகொடுக்கப்பட்டதனால் நன்கு உணரலாம். வாணிகம் பல துறையில் செய் யப்படும். அது பொன் வாணிகமாகவேனும்,

அறுவை (ஆடை) வாணிகமாகவேனும், மற்றும் வெவ்வேருன வாணிகமாகவேனும் இருக்கலாம். ஆனுல், இப்புலவர் சிகாமணியார் தானியமணி களை விற்கும் வாணிகத்துறையினை மேற் கொண்டவர் ஆவார். இவர் தானிய வியாபாரி யாய் இருந்தவர் என்பதைக் '**கூலவாணிகன்**' என்ற அடைமொழி கொண்டு உணரலாம். கூலம் என்பது நெல் முதலிய தானியம் ஆகும்.

அடுத்தபடி நாம் இவர் பெயருடன் இணைத்து வழங்கப்பட்டுள்ள **மதுரை** என்னும் சொல் லைக் குறித்தும் **சீத்தலை** என்னும் மொழியைக் குறித்தும் சிறிது ஆராய்ச்சி செய்ய வேண்டுப வராய் இருக்கிருேம். இவர், தாம்மேற்கொண்ட தானிய வியாபாரத்தினை மதுரையில் நடத்தி, அவ்வூரிலேயே வாழ்ந்து வந்தமையின் '**மதுரை**' என்னும் அடைமொழி சார்த்தி வழங்கப்பட்டு வந்தனர். சீத்தலைச் சாத்தனர் என்று ஏன் இவர் வழங்கப்பட்டார் என்பதையும் ஈண்டே உணர்ந்துகொள்ளுதல் வேண்டும். சாத்தனர், **சீத்தலைச்** சாத்தனர் என்று பெயர் பூண்டமைக்கு நம் தமிழகத்தில் இரு காரணங்கள் இயம்பப் பட்டு வருகின்றன. ஒன்று, "சீத்தலை என்பது ஓர் ஊர். இவ்வூரில் சிறப்புற்று விளங்கிய தெய் வம் ஐயனர் என்பது. இவ்வையனர் தெய்வத் துக்குச் 'சீத்தலைச் சாத்தனர்' என்ற பெயர் வழங்கப்பட்டுவந்தது. அப்பெயரையே இவர்க்கு இட்டு வழங்கினர்,' என்று கூறப்பட்டு வருவது. சீத்தலைச் சாத்தனர் என்ற பெயருக்கு

மற்றொரு காரணமாகக் கூறப்படுவது, பின் வரும் குறிப்பாகும். சீத்தலைச் சாத்தனார் சங்க கால அறிவுடைச் சான்றோர் அல்லரா? அவர் தமிழ்ச் சங்கத்தின் புலவர் பெருமக்களுள் தாமும் ஒருவராய் இருந்த போது, தம்மையும் புலவர் என்று ஏற்றுக்கொள்வதற்காகச் சிலர் பாடல்களைப் பாடிக் கொண்டுவந்து சங்கப் புல வர்களின் ஆமோதிப்பைப் பெறப் படித்துக் காட்டுவர். அந்தச் சமயங்களில் அப்பாடல்களில் சொற்குற்றம் பொருட்குற்றம் முதலிய பல குற்றங்கள் மலிந்திருத்தலைக் கேட்குந்தோறும், சகிக்க இயலாத காரணத்தால், தாம் எழுதும் இரும்பு ஆணியாகிய எழுத்தாணிகொண்டு 'இத் தகைய தவறுடைய பாடல்களையும் நாம் கேட்க நேர்ந்ததே!' என்று தம் தலையில் குத்திக் கொள்வாராம். இவ்வாறு குத்திக்கொண்டு வந்த காரணத்தால், குத்துண்ட இடம் புண்ணா கிச் சீயொழுகும் தலையுடைமைபற்றி, சீத்தலைச் சாத்தனார் என்று வழங்கப்பட்டனர்,

"இது புலவருக்கு நின்றபாடு இல்லையோ?" என்று நீங்கள் வினவவும் கூடும் அல்லவா? இவர்க்கு இவ்வாறு தம் தலையில் குத்திப் புண் ணாக்கிக்கொண்ட செயல் முற்றுப்பெறும் கால மும் வந்து சேர்ந்தது. வள்ளுவப் பெருந்தகை யார் வரைந்த வாய் மொழியாகிய திருக்குறட் பாக்களைக் கேட்ட பின்னர் அக்குறட்பொருட் செறிவு இவர் குத்திப் புண்ணாக்கிக்கொள்வதை நிறுத்தச் செய்தது. இதனை அழகுபட இவர்

காலத்துப் பெரும்புலவருள் ஒருவரான **உறையூர் மருத்துவன் தாமோதரனுர்** தமது அருமைப் பாடல் ஒன்றில் '**வள்ளுவர் முப்பாலால் தலைக்குத் துத்தீர்வு சாத்தற்கு,**' என்று விளக்கமாகக் குறிப்பிட்டுள்ளார். இதன் விளக்கத்தினை இன்னமும் தெளிவுற இந்நூலிலேயே உறையூர் மருத்துவன் தாமோதரனுர் என்னும் தலைப்பின்கீழ் எழுதப் பட்ட இடத்தில் கண்டு உணர்வீர்களாக.

மேலே காட்டிய காரணங்களால் இப்புலவர் பெருந்தகையார் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனுர் என்று குறிக்கப்பட்டு வந்துள்ளார் என்பதை உணர்க. இவர் மதுரைச் சீத்தலைச் சாத்தனுர் எனவும், சீத்தலைச் சாத்தனுர் எனவும், சாத்தனுர் எனவும் வழங்கப்பட்டுள்ளார்.

இப்புலவர் பெருமானுர் இவரை ஒத்த புலவர்களால் சிறப்பிக்கப்பட்ட சீர்மையோர் ஆவார். இவரோடு நட்புக்கொண்டிருந்த புலவர். சிலப்பதிகார ஆசிரியர் **இளங்கோ அடிகளார்** ஆவார். அவர் இவரைக் குறிப்பிடும் போதெல்லாம். '**நன்னூற்புலவன்**' என்றும், '**தண்டமிழ் ஆசான் சாத்தன்**' என்றும், **தண்டமிழ்ச் சாத்தன்**' என்றும் குறிப்பிட்டு, இவர்க்கு இருந்த தண்டமிழ் அறிவையும், நல்ல நூல்களை இயற்றும் வன்மையினையும், இவர் ஆசிரியர் என்று போற்றத்தக்க பெருமை சான்றவர் என்பதையும் நன்கனம் புலப்படுத்தியுள்ளார்.

சீத்தலைச்சாத்தனார் இளங்கோ அடிகளாரின் தமையனை சேரன் செங்குட்டுவனிடத்தில் நட்புக்கொண்டிருந்தனர். அந்நட்புக் காரணமாகக் கண்ணகி என்பாளது கற்பின் மேம்பாட்டை அவனுக்கு எடுத்துக்கூறி, அவனைக்கொண்டு அவளுக்குக் கோயில் கட்டுவித்து, நித்திய பூசைகள் நியமமாக நடத்தி வைக்கச் செய்த சீலர் ஆவர். இவர் செங்குட்டுவனுக்குக் கண்ணகியின் வரலாற்றைக் கூறிய போது, அருகு இருந்து கேட்ட பின்னரே இளங்கோவடிகள் சிலப்பதிகாரமாம் சீரிய நூலைச் செய்ய நேரிட்டது. ஆகவே, கற்புடைக் கடவுளாம் கண்ணகியின் கோயில் எடுப்புக்கும், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரமாம் காவியத்தை நாம் பெறுதற்கும் பெருங்காரணர் சீத்தலைச் சாத்தனார் என்பதை அறிந்து நாம் இன்புற வேண்டுபவராவோம்.

இவர் பெரும்புலவராய் இருந்தும் திருவள்ளுவர் எழுதிய திருக்குறளில் மிகுந்த ஈடுபாடு உடையவராய் இருந்தார் என்பதை முன்னர்க் கண்டோம். திருவள்ளுவரிடத்திலும், அவர் செய்த நூலிடத்திலும் இவர் கொண்டிருந்த மதிப்பு, இவர் எழுதியுள்ள நூலாகிய மணிமேகலையில் திருவள்ளுவரையும் திருக்குறளையும் புகழ்ந்து பேசுவதிலிருந்து நன்கு உணரலாம். இவர் திருவள்ளுவரைப் '**பொய்யில் புலவன்**' என்று கூறிப் போற்றுகிறார்; திருக்குறளைப் '**பொருள் உரை**' என்று புகழ்கிறார்; திருக்குறள் நூலிலிருந்து குறளை எடுத்து ஓர் எழுத்தும் ஒரு

சொல்லும் சிதையாதவாறு தம் நூலில் அமைத்தும் பாடியுள்ளார். அதுவே மணிமேகலையில், இருபத்திரண்டாம் காதையாகிய **சிறைசெய் காதையில்,**

**" தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றஅப்**
**பொய்யில் புலவன் பொருள்உரை தேருய்."**

என்று குறிப்பிடப்பட்டது. சீத்தலைச் சாத்தனார்க்குத் திருக்குறளிடத்தில் இருந்த பெருமதிப்புக்கு மேலே காட்டிய சான்று மட்டும் போதாது. மன்னர்கள் நாடு, மலை, நதி, ஊர், முரசு, தமிழ் அறிவு, கொடி, ஊர்தி முதலியனவற்றைச் சிறப்பாகப் பெற்றிருந்தாலும், முப்பாலாகிய திருக்குறளே அம்மன்னர்கட்கு முடியில் மாலையாய் விளங்க வல்லது என்னுங் கருததால்,

**" மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்**
**மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும்—மும்மாவும்**
**தாமுடைய மன்னர் தடமுடிமேல் தார்அன்றே**
**பா'முறைதேர் வள்ளுவர்முப் பால் ?"**

என்று பாராட்டியுள்ள பாட்டுரையைப் பாருங்கள்.

அதாவது, " கொல்லிமலை, நேரிமலை, பொதிகைமலை எனப்படுகின்ற மூன்று மலைகளையும் ; சேரநாடு, சோழநாடு, பாண்டிநாடு எனப்படுகின்ற மூன்று நாடுகளையும் ; பொருனை நதி, காவிரி நதி, வையை நதி எனப்படுகின்ற மூன்று நதிகளையும் ; கருவூர், உறையூர், மதுரை எனப்

படுகின்ற மூன்று ஊர்களையும்; மங்கல முரசு, வெற்றி முரசு, கொடை முரசு எனப்படுகின்ற மூன்று முரசுகளையும்; இயல், இசை, நாடகம் எனப்படுகின்ற மூன்று தமிழ்களையும்; விற்கொடி, புலிக்கொடி, மீனக்கொடி எனப்படுகின்ற மூன்று கொடிகளையும்; கனவட்டம், பாடலம், கோரம் எனப்படுகின்ற மூன்று குதிரைகளையும் பெற்ற சேர சோழ பாண்டியர் எனப்படும் வேந்தர் மூவரும் அவர் அவர் தம் தம் முடியின் மேல் வைத்துக்கொண்ட மாலை திருக்குறள் அன்றோ?" என்பது.

சீத்தலைச் சாத்தனாரின் அறிவு ஆற்றலைக் காண விழையும் நாம் இப்புலவர் தனி நூலாக மணிமேகலை என்னும் நூலைத்தவிர்த்துத் தனிப் பாடல்களாகப் பாடியுள்ளனவாகக் கிடைத்துள்ள பாடல்களை நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, திருவள்ளுவ மாலை என்னும் தொகை நூல்களில் பரக்கக் காணலாம். மணிமேகலை என்னும் நூலில் இவர் புத்தமதக் கருத்துக்களை ஆழ்ந்த அனுபவ முறையில் கூறியிருப்பதனாலும், புத்தர் பெருமானைப் போற்றும் முறைகளை அழகாகக் கூறியிருப்பதனாலும், இப்புலவர் பெருமானார், புத்த மதத்தினைச் சார்ந்தவராய் இருக்க வேண்டும் என்பது புலனாகிறது. ஈண்டு நாம் இப்பெருந் தகையாரது புலமைப் பெருக்கை அறிந்து இன்புறுதற்கு இவர் பாடியுள்ள புறநானூற்றுப் பாடலையே பற்றுக்கோடாகக் கொள்வோமாக.

இவரது ஏனைய பாடல்களின் இன்சுவையினை நுகர்தற்கு இவ்வேடு இடந்தாராது. பின்னர் நீங்களே அப்பாடல்களைப் படித்துப் பெரும் பயன் உறுவீர்களாக.

சாத்தனுர் பாடினதாகப் புறநானூற்றில் காணப்படும் பாடல் ஒன்றே ஆகும். அப்பாடல் பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன் மாறன்மீது பாடப்பட்டது. இம்மன்னனுக்கு முன்னும் பின்னும் அமைந்த சொற்களாகிய பாண்டியன், மாறன் என்பன, இவன் மூவேந் தர் குடிகளுள் ஒன்ருன பாண்டியர் குடியினன் என்பதைப் புலப்படுத்துகின்றன. இவன் பாண் டியர் குலத்து மன்னர்களுள் நற்பெயர் எடுத்த நல்லரசன் போலும்! அதனுலேதான் நன் மாறன் என்று போற்றப்பட்டுள்ளான். இவன் வாழ்ந்த இடம் ஒரு பெரிய அரண்மனை. அது பல விதமான அழகிய சித்திரங்களைக் கொண் டிருந்தது. அத்தகைய சித்திர மாடத்தில் இவன் இருந்து வாழ்க்கையில் இவனது வாழ்நாள் உலந்த பின், மண்ணுலகு விடுத்து விண்ணுல கிற்கு விருந்தாகச் சென்றவன். இவ்வாறு இப் பாண்டிய மன்னன் தான் வாழ்ந்திருந்த மாளி கையாகிய சித்திர மாடத்தில் உயிர் விட்ட கார ணத்தால், 'பாண்டியன் **சித்திரமாடத்துத் துஞ் சிய** நன்மாறன்' என்று கூறப்பட்டனன். இவ் வாறு மன்னர்கள் எவ்வெவ்விடங்களில் இருந்து இறந்தார்களோ, அவ்வவ்விடங்களையும் இணைத்து, இன்ன இடத்தில் இறந்த மன்னன்

என்று குறிப்பிட்டு வந்த வழக்கம் தமிழகத்துத் தொன்று தொட்ட வழக்கமாகும். இதனைப் பண்டைக்கால மன்னர்கட்கு அமைந்திருந்த பெயர்களைக் கொண்டும் நன்கு உணரலாம். எடுத்துக்காட்டாகக் **காரியாற்றுத் துஞ்சிய** நெடுங்கிள்ளி, சேரமான் **சிங்கல்பள்ளித் துஞ்சிய** செல்வக் கடுங்கோ வாழியாதன், சோழன் **இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய** நலங்கிள்ளி சேட்சென்னி, சோழன் **குராப்பள்ளித் துஞ்சிய** கிள்ளி வளவன், சோழன் **குளமுற்றத்துத் துஞ்சிய** கிள்ளி வளவன், பாண்டியன் **இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய** நன்மாறன், பாண்டியன் **வெள்ளியம்பலத்துத் துஞ்சிய** பெருவழுதி என்னும் மன்னர்களின் பெயர்களை நன்கு குறிப்பிட்டுக் காட்டலாம். எனவே, சீத்தலைச் சாத்தனாரால் பாடப்பட்ட பாண்டியன் சித்திரமாடத்தில் பூதவுடல் நீத்துப் புகழ் உடல் பெற்றவன் என்பதையும் நாம் நினைவு கூர்வோமாக.

அம்மன்னனைப் பற்றி இப்புலவர் பாடியுள்ள புறநானூற்றுப் பாடல், நீண்ட பாடலும் அன்று; குறுகிய பாடலே ஆகும். அக்குறுகிய பாடலில் அம்மன்னனது வீரம், கொடை முதலியவற்றைச் சுருங்கச்சொல்லி விளங்கவைத்த பெருமை சீத்தலைச் சாத்தனாரையே சாரும். சுருங்கச் சொல்லி விளங்க வைக்காதவர் அன்றோ ஒன்றைப் பாரித்துக் கூறுவர்? இவ்வாறு பாரித்துக் கூறுபவரை அன்றோ வள்ளுவர் இழித்துக் கூறு

கிறார்? அவர்களை எத்துணை அழகாகப் பழித்துக் கூறுகின்றார் பாருங்கள்! அதுவே,

**'பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற**
**சிலசொல்லல் தேற்றா தவர்.'**

என்பது. இப்பாடலால் சுருங்கச் சொல்லி விளங்க வைக்காதவரைப் பற்றி வள்ளுவர் கொண்ட கருத்து விளங்குகிறதன்றோ?

பாண்டியன் சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன் நல்ல கம்பீரமான தோற்றமுடையவனாய் இருந்திருக்க வேண்டும். அவன் தோற்றப் பொலிவை நம் கண்முன் கொணர்ந்து காட்ட, அவனைப் பற்றிக் கூறும்போது சீத்தலைச் சாத்தனார், 'மாலை தாழ்ந்த அழகு மிக்க மார்பையும் முழந்தாளிலேதோய்ந்த பெரிய கையையுமுடைய அழகு மாட்சிமைப்பட்ட பாண்டியன்' என்பதை,

**'ஆரம் தாழ்ந்த அணிகிளர் மார்பின்**
**தாள்தோய் தடக்கைத் தகைமாண் வழுதி'**

என்று கூறிச்சிறப்பித்தார். இத்தகைய தோற்றப் பொலிவுடைய மன்னன் வீரம் உடையவனாய் விளங்கி இருந்திருப்பான் என்று விதந்து கூற வேண்டாவன்றோ? உண்மையில் வீரம்செறிந்த விடலையாகவே இருந்தனன் அப்பாண்டியன்.

'அவன் பகைவர்கட்கு ஞாயிறுபோன்று வெப்பம் தருபவனாய் இருந்தான்,' என்று தண்டமிழ்ச் சாத்தனார் சிறிதும் தயங்காது கூறும் கூற்றே

இதற்குப் போதிய சான்ருகும். இதன் கருத்து. சூரியன் எப்படித் தனது கடுமை இயல்பாகிய வெம்மையினுல் பொருள்களைச் சுட்டு அழிக்கின் றனனே, அது போல அப்பாண்டியன் பகைவர் களைத் தன் சினமாகிய வெம்மையினுல் சுட் டழிப்பவன்,' என்பதாம். இத்தகைய வீரமும் சினமும் அவன் கொண்டிருந்ததனுல், அவன் ஈர நெஞ்சம் இல்லாதவனுய் இருந்திருப்பானே என்று எண்ண வேண்டா. வீரமுள்ள இடத்தில் நிச்சயமாக ஈரம் இருந்தே தீரும். ஈரமாவது அன்பு. இந்த அன்பு அப்பாண்டியனிடம் குடி கொண்டிருந்தது. இதனைக் குறிப்பிடாமலும் விட் டிலர் புலவர் சீத்தலைச் சாத்தனுர். அச்செழியன் பால் அமைந்த அன்பு சாத்தனுரிடத்தில் மட்டும் காட்டப்பட்ட அன்பு போலும் என்று நாம் நினைத்தல் கூடாது. அத்தென்னவன் கொண்ட அன்பு சீத்தலைச் சாத்தனுர் போன்ற புலவர் யாவரிடத்தும் காட்டப்பட்டு வந்த அன்பாகும். அப்பாண்டியன் காட்டிய அன்பு தண்ணிய அன்பு; இன்பம் தரும் அன்பு. இக்கருத்து இப் புலவர் கூறும் உவமை வாயிலாக உணரக் கிடக் கிறது. குளிர்மைக்கு ஏற்றவனை சந்திரனையே அப்பாண்டிய மன்னன் அன்புப் பண்புக்கு அமைந்த உவமையாக அறிஞர் சீத்தலைச் சாத்த னுர் அறைந்துள்ளார். இவ்வாறு பகைவர்க்கு ஞாயிறு அனையனுகவும், புலவர்கட்குத் திங்கள் போன்றவனுகவும் இருந்தான் என்பதை, இப் புலவர் புலப்படுத்தும் புறநானூற்று அடிகள்,

**'ஞாயிறு அனையைநின் பகைவர்க்கு ;**
**திங்கள் அனையை எம்ம னோர்க்கே.'**

என்பன.

இவ்வடிகளில் அமைந்த உவமைகள் சுவை பயப்பன அன்றோ? இன்னோர் அன்ன கருத்துக்கள் அமைந்த அடிகள் புலவர் சீத்தலைச் சாத்தனார் பாக்களில் மலிந்து உள்ளன. அவற்றைப் படித்தற்கான அவா உம்பால் அமைவதாக. இப்புறநானூற்றுப் பாடலிற்பொதிந்த சுவையான பொருள்கள் போன்றே இப்புலவர் பெருமான் பாடியுள்ள ஏனைய பாடல்களிலும் மலிந்து கிடக்கும் என்று உணர்ந்து, அப்பாடல்களைப் படிக்க முனைவீர்களாக.

# 2. உறையூர் மருத்துவன் தாமோதரனர்

சோழர்குல அரசர்களுக்குத் தலை நகரங்களாய் அமைந்திருந்த பேரூர்களுள் உறையூர் என்பதும் ஒன்று. உறையூர் கடைச் சங்க காலத்தில் சிறப்பு மிகுதியும் பெற்ற சீரூர் ஆகும்; புலவர் பலராலும் புகழப்படும் ஊரும் ஆகும். அது "**ஊர் எனப் படுவது உறையூர்,**" என்று கூறப்படும் பெருமை மிக்கது. அதுவே தேவாரத்தில் **மூக்கீச்சரம்** என்று கூறப்பட்டுள்ளது. அவ்வூர்ச்சேவல் ஒன்று யானையோடு போர் செய்து அதனை வென்ற காரணம் பற்றி அவ்வுறையூர் கோழி என்ற பெயரையும் பெற்றுள்ளது. உறையூரை உறந்தை என்றும் கூறுவர். அப்பதியின் சிவா லயத்தில் வில்வமரம் தல விருட்சமாய் இருத்த லின், அதனை வில்வாரணியம் என்றும் கூறுதல் உண்டு. அத்தலத்தைச் சேர சோழ பாண்டிய ராகிய மூவேந்தரும் சேர்ந்து வழிபட்டுள்ளனர். அவ்வுறையூர் திருச்சிராப்பள்ளிக் கோட்டைப் புகைவண்டி நிலையத்திற்கு மேற்கே ஒன்றேகால் கல் தூரத்தில் உள்ளது. "அறம் துஞ்சும் உறந்தை"—அதாவது, நீதி தங்கும் உறையூர்—என்று காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் கூறிய கருத்தும் அவ்வூருக்குப் பெருமை தருவதாகும்.

அந்த ஊரில் வாழ்ந்தவரே **தாமோதரனார்** என்னும் புலவர். தாமோதரன் என்பது திருமாலுக்குரிய பெயர்களுள் ஒன்று. இப்பெயரை இப்புலவர் பெற்றுத் திகழ்ந்ததனால் இவர் திருமால் சமயத்தைச் சார்ந்தவராய் இருக்க வேண்டும் என்பதை யூகித்து உணரலாம். இவர் பெயர் **மருத்துவன் தாமோதரனார்** என்று அடைமொழியுடன் கூறப்பட்டிருத்தலின், இவர் மருத்துவ நூலில் வல்லவராய், 'நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்ப' மருந்து கொடுத்துப் பிணியினைப் போக்கி வந்த மருத்துவத் தொழிலினராய் இருந்தவர் என்பது உணரப்படுகிறது. அதாவது, இவர் வைத்தியம் செய்யும் தொழிலினர் என்பதாம்.

உறையூர் மருத்துவன் தாமோதரனார், தாம் மேற்கொண்ட தொழிலுக்கு ஏற்பத் தாம் பாடியுள்ள பாடல்களுள் ஒன்றில் அத்தொழிலில் தமக்கு இருந்த அறிவின் முதிர்ச்சியினை வெளிப்படுத்தியுள்ளார். அப்பாடல், திருவள்ளுவர் நூலாகிய திருக்குறளையும், அந்நூலைச் செய்த ஆசிரியர் திருவள்ளுவரையும் புகழ்ந்து பாடப்பட்ட பாடல்கள் அடங்கிய **திருவள்ளுவ மாலை** என்னும் நூலில் உள்ளது.

அப்பாடலில் தலை நோய் நீங்கக் கூறப்பட்ட மருத்துவமுறையும், மற்றும் ஒரு வரலாற்றுக் குறிப்பும் காணப்படுகின்றன. சாத்தனார் என்பவர் ஒரு பெரும்புலவர். இவரே மணிமேகலை

என்னும் மாபெரு நூலைப் பாடியவர். இவர் தவருகப் பாடி வரும் புலவர்களின் பாடல்களைக் கேட்டு, அப்புலவர்களின் அறியாமைக்கும் புலமைச் சிறுமைக்கும் அவர்களைக் கடிந்துகொள்ளாமல், தம்மைத் தாமே வருத்திக்கொள்ளும் இயல்புடையவர். தவறுடைய பாடல்களைக் காணும்போதும் கேட்கும்போதும், தாம் எழுதும் இருப்பு எழுத்தாணியினுல் தம் தலையில் குத்திக்கொள்வார். அக்குத்துப் பல முறை குத்தப்பட்டு வந்தமையால், தலைப்புண் ஆருமல், சீ நிறைந்த புண்ணுகவே இருந்தது. அதனுல், இவர் சீத்தலைச் சாத்தனுர் என்றும் கூறப்பட்டு வந்தார். இத்தகைய புலவர் பெருமான் திருவள்ளுவர் பாடிய திருக்குறளைக் கேட்டதும், தாம் தலையில் குத்திக்கொள்வதை நிறுத்திக்கொண்டனர். திருக்குறளைக் கேட்டதும் குத்திக்கொள்வதை நிறுத்தினமைக்குக் காரணம் நல்ல கருத்துடைய பாடல்களைக் கேட்க நேர்ந்த மகிழ்ச்சியே அன்றி வேறன்று. இங்குக் கூறப்பட்ட இச்சீத்தலைச் சாத்தனுர் வரலாற்றை முன் வரலாற்றில் அறிந்துள்ளீர் அன்ருே? இதனைத்தான் மருத்துவன் தாமோதரனுர். "வள்ளுவர் முப்பாலால் தலைக் குத்துத் தீர்வு சாத்தற்கு" என்று தம் பாடலில் குறிப்பிட்டுள்ளார். முப்பால் என்பது திருக்குறள். இவ்வரலாற்றை உதாரணம் வாயிலாக உரைக்க விரும்பிய மருத்துவன் தாமோதரனுர், "சீந்திநீர்ச் சருக்கரையையும், நசுக்கப்பட்ட சுக்கையும் தேனேடு கலந்து மோந்தால் தலைக்

குத்து நீங்குவது (அதாவது தலைவலி நீங்குவது) போல, வள்ளுவர் திருக்குறளைக் கேட்ட பின் சாத்தனாருடைய தலைக்குத்து நீங்கியது,'' என்று கூறியுள்ளார். தலை நோய் நீங்குவதற்குரிய மருந்தினை இவர் தெள்ளத்தெளிய உணர்த்தி யிருப்பதிலிருந்து இவர் மருத்துவத் துறையில் கைதேர்ந்தவர் என்பது தெள்ளத் தெளியப் புலனாகின்றதன்றோ? ஆகவே, இவர்தம் தொழில்சிறப்புத் தோன்ற **மருத்துவன்** தாமோதரனார் என்றும், இவர் பிறந்து வாழ்ந்த ஊர் உறையூர் என்பது புலப்பட, **உறையூர்** மருத்து வன் தாமோதரனார் என்றும் கூறப்பட்டு வந் துள்ளார்.

இப்புலவர் பெருமகனார் பாடியுள்ளனவாகக் கிடைத்துள்ள பாடல்கள் ஆறு. அவற்றுள் திரு வள்ளுவமாலையிற்கண்ட பாடல் ஒன்று. புற நானூற்றில் உள்ள பாடல்கள் மூன்று. அக நானூற்றில் இருக்கும் செய்யுள்கள் இரண்டு.

மருத்துவன் தாமோதரனரால் பாடப்பட்ட பெருமை மிக்க மன்னர் இருவர். அவர்களுள் ஒருவன், **சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந் திருமாளவன்**. மற்றொருவன், **பிட்டங்கொற்றன்** என்பவன்.

சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந் திருமாவளவன், பாண்டியன் வெள்ளியம்பலத் துத் துஞ்சிய பெருவழுதியுடன் நட்புப் பூண்ட வன். அவன் புலவர்களால் பாடப்பெற்ற புகழ்

படைத்தவன். அவனைக் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார், கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் என்னும் புலவர் இருவரும் பாடிப் புகழ்ந்துள்ளனர். அவனை உறையூர் மருத்துவன் தாமோதரனாரும் பாடியுள்ளார். அம்மன்னன் அரச பாரத்தைப் பொறுக்கும் பேராற்றல் படைத்தவன் என்பதைத் தாமோதரனார் சிறப்பாக எடுத்து மொழிகிறார்; அவன் அரசாகிய வண்டியினை நடத்திச் செல்லும் முறைமைக்குப் பகட்டினை உவமை காட்டுகிறார். அதாவது, எருது எவ்வளவு பாரம் ஏற்றப்பட்ட வண்டியினையும், எப்படித் தன் முழுவலி கொண்டு இழுத்துச் செல்கிறதோ, அப்படி அம்மன்னனும் அரசியல் பாரத்தை நடத்திச் செல்கிறான் என்பதாம். இதனையே இப்புலவர் "உரனுடை நோன்பகடன்ன எங் கோன்" என்று குறிப்பிட்டுள்ளனர். "வன்மையுடைய பாரம் பொறுக்கும் எருதை ஒக்கும் எம் சோழ மன்னன்" என்பது, இவ்வடியின் பொருளாகும். இவர் சோழ மன்னனது வெண் கொற்றக் குடையினிடத்து மிகுந்த மரியாதை வைத்திருந்தனர்; வானத்தில் முழுச்சந்திரனை எங்குக் கண்டாலும், அதற்கு வணக்கம் செலுத்தி வந்துள்ளார். அச்சந்திரனைக் காணுந்தோறும் இவருக்குச் சோழ மன்னன் குடையின் நினைவு வருதல் இயல்பாய் இருந்ததே இவர் சந்திரனைத் தொழுதற்குக் காரணமாகும். நம் நாட்டில் பூரண சந்திரனைத் தொழுதல்

தொ—2

வழக்கமன்று; ஆனால், பிறைச் சந்திரனைத் தொழுது வந்த வழக்கம் அன்றும் இன்றும் அமைந்த வழக்கமாகும். "பிறை தொழுகென்றல்" என்ற துறை அகப்பொருள் நூல்களில் காணப்படுகிறது. அமாவாசைக்குப் பிறகு இரண்டாம் நாள் ஆகாயத்தில் பிறையைக் காண்கின்றனர். இவற்றால் அன்றும் இன்றும் பிறை தொழுதனர், தொழுகின்றனர் என எடுத்துக் காட்டலாம். இம்மரபையும் இப்புலவர் மறக்க வேண்டியவராய் இருந்தார். இதற்குக் காரணம், வளவனது குடையின்மீது இருந்த புற்றே ஆகும். இப்புலவர் பெருமகனார் அச் சோழனைப் புகழ்ந்த பாடலில் நல்ல உவமையை அமைத்துப் பாடியுள்ளார். அவ்வுவமை படிக்கச் சுவை தருவதாகும். அதாவது, விண்ணில் திருவாதிரை என்னும் நட்சத்திரம் விளங்குவது, கடலில் செல்லும் பரதவர் கட்டுமரங்களில் இருந்த விளக்கு ஒளி விடுவது போன்றது என்பது. சிறு நட்சத்திரத்தின் மின் ஒளிக்குச் சிறு விளக்கு எத்துணைப் பொருத்தமாய் இருக்கிறது பாருங்கள்!

> 'முந்நீர் நாப்பண் திமில்சுடர் போலச்
> செம்மீன் இமைக்கும் மாக விசும்பு'

என்னும் அடிகளே மேலே காட்டிய உவமை அமைந்த அடிகளாகும். "கடலின் நடுவே மீன் பிடிக்கச் செலுத்தப்படும் கட்டு மரங்களிலிருந்து ஒளி விடும் விளக்குப்போலத் திருவா

திரை நட்சத்திரம் இமைக்கும் ஆகாயம்'' என்பது இதன் பொருள்.

அடுத்தாற்போல உறையூர் மருத்துவன் தாமோதரனார் பிட்டங்கொற்றனைப் பாடியுள்ள பாடற்பொருளையும் காண்போமாக :

பிட்டங்கொற்றன் ஒரு பெருவீரன். அவன் குதிரை மலைக்குத் தலைவன்; சேரமான் மாக்கோதைக்குப் பெருந்துணைவனாய் இருந்து, அவனது படைத் தலைவனாகத் தொழில் புரிந்தவன்; மேலும், புலவர் பலராலும் பாடப்பட்ட பெருமை நிறைந்தவன்; கொடைக்குணத்திலும் குறை உளம்படாத குணவானவன். இன்னமும் அவனைப் பற்றிப் பெரிதும் அறிய விரும்புவார் வடமவண்ணக்கன் தாமோதரனார் என்னும் மற்றொரு புலவர் வரலாற்றில் குறிப்பிடப்பட்டிருத்தலினின்று கண்டு தெளிவாராக.

இத்தகைய பீடுடைய தலைவனை இப்புலவர் எங்ஙனம் போற்றிப் புகழ்ந்துள்ளார் என்பதையும் உணர வேண்டாவா? உறையூர் மருத்துவன் தாமோதரனார் பிட்டங்கொற்றனைப் பாடிய பாட்டின் தொடக்கத்தில் அவனது வீர மேம்பாடு மிகச்சிறப்பித்துக் கூறப்படுகிறது. புலவர் பகை மன்னருக்குக் கருணையோடு எச்சரிக்கை செய்கிறார். "பகை மன்னர்களே, நீங்கள் குதிரை மலைக்குத் தலைவனான பிட்டங்கொற்றனை அணுகுதல் செய்யாதீர்கள். அவன் தன்னைப் பாடிவரும் பாணர்க்கும் பாணர் சுற்றத்தார்க்கும்

எளியன் ஆவன். அவர்களே அவனை அணுகுதற் குரியவர்கள். உம்மைப்போன்ற பகை மன்னர் அணுகுதற்கு உரியர் அல்லர். அவன் எளியன் அல்லன்,'' என்று கூறி எச்சரிக்கை செய்கின் றனர். இதனால், பிட்டங்கொற்றனது கொடைக் குணமும் வீர மேம்பாடும் வெளிப்படுகின்றன அல்லவா? இவ்விரண்டும் அவன்பால் குடி கொண்டிருந்தன என்பதைப் புலவர் எத்துணைச் சமத்காரமாகக் கூறியுள்ளார் கவனித்தீர்களா? இப்பிட்டங்கொற்றனது வன்மைக்குக் கொல்லன் தன் உலைக்களத்தில் வைத்துள்ள இரும்பால் ஆகிய உலைக்கல்லை உவமை கூறியுள்ளார். அவ் வுலைக் கல்லின்மீதுதான் காய்ச்சப்பட்ட இரும் புப் பொருள்கள் வைத்து அடிக்கப்படும். இவ் வாறு இங்கு இவர் பிட்டங்கொற்றனைப் பற்றிக் கூறிய கருத்துக்கள் யாவும் இவர் பாடியுள்ள பாடல்களில் காணக்கிடக்கின்றன.

உறையூர் மருத்துவன் தாமோதரனார் பாடி யுள்ள புறநானூற்றில் காணப்படும் மூன்றும் பாட்டு யார்மீது பாடப்பட்டது என்பது அறி தற்கு இல்லை. ஆனால், அப்பாடலும் ஒருவன்மீது பாடப்பட்டது என்பது அப்பாடலில் உள்ள "செருவெங்குரிசில்" என்னும் தொடரால் புலனாகிறது.

அக்குரிசில் சிறந்த வீரன் ஆவான். அவன் போரில் புறமுதுகு காட்டாது போர் செய்து, தன் சென்னியில் வடு உடையவனாய் இருந்தான்

என்பதைப் புலவர் தம் பாடலில் புலப்படுத்துகிறார். "வாள்வடு விளங்கிய சென்னி" என்பதே இக்குறிப்பை விளக்கும் அடி.

இனி அடுத்தாற்போல உறையூர் மருத்துவன் தாமோதரனார் அகப்பொருள் தழுவிய பாடல்கள் பாடியுள்ள திறனை அகநானூற்றுப் பாடலாலும் அறிந்துகொள்ளலாம். அப்பொருள் வளத்தை மேல் வகுப்பில் நீங்களே படித்து இன்புறுவீர்கள்.

# 3. கணியன் பூங்குன்றனார்

கணியன் பூங்குன்றனார் என்பார் புலவர். இப் புலவர் எழுத்துப் புலமையே அன்றிச் சோதிடங்கூறும் சோதிடப் புலமையும் ஒருங்கே பெற்றவர் என்பதை இவரது பெயராகிய **பூங்குன்றனார்** என்பதற்கு முன்னர் அமைந்த **கணியன்** என்னும் சொல் காட்டிக்கொண்டிருக்கிறது. கணியன் ஆவான் சோதிடம் உரைப்பவன். இச் சொல் இப்பொருளைத்தந்து நிற்பதைப் புறப் பொருள் வெண்பா மாலை என்னும் நூலிற் காணலாம்.

இவ்வாறு சோதிடம் கூறுவோன் சிறந்த அறிஞன் என்பதையும், அப்புறப்பொருள் வெண்பா மாலை என்னும் நூலால் அறிந்து கொள்ளலாம். "துணிபு உணரும் தொல் கேள்விக் கணியன்" என்பதும் ஈண்டு அறிதற்குரியது.

இத்தகைய சோதிடர்க்குரிய சிறப்பு இயல்புகள் இப்புலவர் பெற்றிருந்த காரணத்தால், இப் புலவர் **கணியன்** பூங்குன்றனார் என்று சிறப்பிக்கப்பட்டனர். இவருக்கு இயற்பெயராய் உள்ள பூங்குன்றனார் என்பது இவருக்கு இடத்தால் வந்த பெயராகும். பூங்குன்றம் என்பது ஒரு நாட்டின் தலைநகர். "பூங்குன்ற நாட," என்று

நாலடி நானூற்றில் வரும் தொடரால் இந்தக் கருத்தை உறுதிப்படுத்தலாம். அத்தகைய நாட்டின் பெயரைத் தம் பெயராக இப்புலவர் கொண்டுள்ளார். நாட்டின் பெயரை மக்கள் கொண்டு வாழ்கின்றூர்கள். என்பதற்குச் சான்ருக அண்ணுமலை, வேதாசலம், சேஷகிரி, திருவேங்கடம் என்னும் பெயர்களை மக்கள் இக்காலத்தில் சூட்டித் திகழ்வதைக் காணலாம்.

இவ்வாறு தொழிலாலும் இடத்தாலும் பேர் பெற்ற இப்பெரியார், சிறந்த புலவர். இதனை இவர் பாடிய பாடல்களாகப் புறநானூற்றிலும் நற்றிணையிலும் காணப்படுவனவற்றினின்றும் நாம் அறிய வேண்டுபவர்களாய் உள்ளோம். இவர் இரண்டே பாடல்களைப் பாடியுள்ளார். ஒன்று, புறநானூற்றுப் பாடல்; மற்றொன்று, நற்றிணைப்பாடல். நற்றிணைப் பாட்டைப்பற்றி நாம் நம் நாட்டத்தைச் செலுத்தாமல் போயினும், புறநானூற்றுப் பாடலில் நம் நாட்டத்தைச் செலுத்துவோமாக.

கணியன் பூங்குன்றனரது புறநானூற்றுப் பாடல் சிந்தைக்கும் செவிக்கும் இன்பம் தருவதாகும்; படிக்கப் படிக்கப் பரமானந்தம் பயக்க வல்லதாகும்; பரந்த மனப்பான்மையினைப் பாலிப்பதும் ஆகும். தமிழ் மக்களின் பண்பாட்டை அறிதற்கு இப்பாடல் பெரிதும் துணை செய்ய வல்லதாகும். இப்பாடல் முழுமையினையும் எடுத்துப் பலர் பேசாமல் போயினும்,

இதில் உள்ள ஓர் அடியினை எடுத்துக் காட்டாத சொற்பொழிவாளர்கள் இல்லை என்றுகூடக் கூறிவிடலாம். அச்சொற்பொழிவாளர் இப்புற நானூற்றுப் பாடலைப் படித்தும் இருக்கமாட்டார். ஆனால், பலரும் சொல்வதைக் கேட்டுக்கேட்டுத் தாமும் அவ்வடியினைத் தம் சொற்பொழிவின் போது இடையே கூறிவிடுவார். அவ்வடி எது தெரியுமோ? அதுதான், "**யாதும் ஊரே; யாவரும் கேளிர்.**" என்பது. ஏன்? இவ்வடி உங்களுக்கும் தெரிந்ததுதானே? இனி அப் பாட்டின் முழுப்பொருளையும் காண முனைந்து நிற்போமாக.

கணியன் பூங்குன்றனர் நமக்கு நன்மை வருவதற்கும், தீமை வருவதற்கும் நாமே காரணர் அன்றிப் பிறர் ஆகார்," என்று கூறும் கருத்து மிக மிகச் சீரிய கருத்தாகும். இதனை இவர், "**தீதும் நன்றும் பிறர்தர வாரா,**" என்றன்றோ கூறுகிறார்? இந்த உண்மையினை நன்கு உணராத காரணத்தால், நாம் துன்பம் துய்க்கும் போது, இத்துன்பம் இன்னவனால் வந்தது என்று அன்றோ எண்ணி ஏக்கம் எய்துகிறோம்? ஆனால், துன்பம் வந்ததற்கு ஆதிகாரணம் உண்மை உணரப்படுமானால், ஏக்கத்திற்கு இடம் இல்லாமல் போகும். "நாம் சாவதன்பொருட்டுத் தளர்தல் கூடாது," என்ற உபதேசமும் இவரது பாடலில் காணப்படுவதாகும். "சாதல் என்பது உலக இயற்கை. அது திடுமெனப் புதிதாக வந்தது என்று கருதவேண்டா. அது தொன்று

தொட்ட உலக இயற்கையில் ஒன்று,'' என்பதைச் "**சாதலும் புதுவது அன்று,**" என்று கூறும் கருத்துப் போற்றுதற்குரிய கருத்தாகும்.

இப்புலவர் பெருமான் நல்வாழ்வு உற்ற போது அதன்பொருட்டுப் பெருமகிழ்வு கொண்டனர் என்றேனும், அன்றி வாழ்க்கையில் வெறுப்பு வந்துற்ற போது அதன்பொருட்டுத் துன்புற்றிருந்தனர் என்றேனும் நாம் நினைத்தற்கில்லை. இவர் இன்பதுன்பங்களை ஒரே விதமாகவே கருதி வாழ்ந்தவர் என்பது நன்கு தெரிகிறது. இதனால் இவரது மனப்பான்மையினை நன்கு உணரலாம். இவரது இம்மனப்பான்மையைத்தான் இவரது பாடலில்,

> **"சாதலும் புதுவது அன்றே ; வாழ்தல்**
> **இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே.''**

என்று இயம்பிச் சென்றனர். இவ்வரிய உபதேசமொழிகளை இவர் கூறியிருத்தல், தம் மனப்பண்பை மட்டும் எடுத்துக் காட்டுதற்கு அன்றி இப்பண்பில் ஏனைய உலக மக்களும் வாழ்தல் வேண்டும் என்பதற்கே என்பதை நாம் உணர்ந்து இவரது அடி ஒற்றி நடக்கவேண்டும்.

வாழ்க்கை அதன் வினைப்படி நடக்கும் என்பதும், இவரது ஆழ்ந்த அனுபவக் கருத்தாகும். அதாவது, 'ஊழின் வன்மைக்கேற்ப வாழ்வு அமையும்,' என்பதே இவர் கூற வந்த கருத்து. இவர் ஓர் உதாரணம் காட்டி விளக்கியிருப்பதி

லிருந்து இந்த உண்மையினை உணர்ந்து கொள்ளலாம். இவர் கூறும் உவமையாவது, "ஆற்றின் நீர் செல்லும் வழியே தெப்பம் செல்வதுபோல, உயிர் வாழ்க்கையும் ஊழின் போக்கில் நடக்கும்," என்பதாம். எவ்வளவு பொருத்தமான உவமை பார்த்தீர்களா! இவ்வுவமையுடன் கூடிய அரிய அடிகளை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டாவா? அவ்வடிகளே,

> **"கல்பொருது இரங்கும் மல்லல் பேர்யாற்று**
> **நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்**
> **முறைவழிப் படூஉம்."**

என்பன. இதன் பொருள், "கல்லை அலைத்து ஒலித்துக்கொண்டு வரும் வளப்பம் மிக்க பெரிய யாற்றின் நீர் செல்லும் வழியே போகும் தெப்பம் போல. அரிய உயிரும் விதி வழியே நடக்கும்," என்பதாம்.

இவ்வளவு அரிய பெரிய கருத்துக்களைத் தாமே அறிந்து கூறிய போதிலும், இவை அனைத்தும் தாம் கண்டறிந்து உரைத்த கருத்தாக அறிவிக்க எண்ணுமல், தம் பணிவு தோன்ற இவை அனைத்தையும், "நன்மையின் கூறுபாட்டை அறிந்தோர் கூறியுள்ள நூலால் அறிந்தோம்," என்று கூறியிருப்பது இவரது அடக்க முறையினை அறிதற்குத் துணை செய்ய வல்லதாகும். இவர் நூலொடு கூடிய மதி மிக்கவராய், உலக இயல்பை நன்கு உணர்ந்தவராய், சீரிய மனப்பண்பு வாய்க்கப் பெற்றவராய்த்

தம் உள்ளத்தில் கள்ளம் கபடு அற்றவராய் இருந்தமையினுல், தம் உள்ளக் கருத்தை ஒளியாது உரைக்கும் முறையில் தம் பாடலின் ஈற்றில்,

> **" பெரியோரை வியத்தலும் இலமே ;**
> **சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே."**

என்று கூறி முடித்துள்ளார்.

இக்கணியன் பூங்குன்றனுர் மனப்பண்பை நாமும் வாய்க்கப் பெறுதல் வேண்டும். அவ்வாறு வாழ்தற்கான முறையில் நம் வாழ்வைப் பண்படுத்தி வாழ வேண்டும். அப்போதுதான் நாமும், " பெரியோரை வியவோம் ; சிறியோரை இகழோம்," என்று பெருமதிப்புடன் பேசிக் கொள்ளும் நிலையினைப் பெறுவோம், அவ்வாறு அன்றி, இவ்வடியினை மனனம் செய்துகொண்டு, ஒப்பிப்பது போன்று உரைப்பதில் பயன் இல்லை. இந்தப் பண்புகள் இருந்தால்தான் நாமும், "யாதும் ஊரே ; யாவரும் கேளிர்," என்னும் இவ்வடியினைக் கூறுதற்கு உரியவர் ஆவோம். இப்புலவர் பெருமானுரின் அறிவுக்கூறும் அனுபவ வாழ்வும் நமக்கும் அமைய நாம் பாடுபடுவோமாக.

# 4. மதுரைத் தமிழக் கூத்தனார்

மதுரைத் தமிழக் கூத்தனார் என்பவர் தாம் மேற்கொண்ட தொழில் காரணமாக இப்பெயர் பெற்றவர். இவர் மேற்கொண்ட தொழில், கூத்தினை நடத்தித் தாமே நடித்து வந்த தொழிலாய் இருக்கவேண்டும். இக்காரணம் பற்றி இவர் **தமிழக் கூத்தனார்** என்று கூறப்பட்டிருக்கிறார். "ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாய் இரு," என்னும் பழமொழி இன்றும் நிலைத்துப் பலராலும் கூறப்பட்டுவருதலின், ஆரியக்கூத்து என்பது ஒரு தனிச் சிறப்புடைய கூத்து என்பதை நாம் அறிந்துகொள்ளலாம் அன்றோ? அவ்வாறு ஆரியர்களால் நடிக்கப்பட்ட கூத்து ஆரியக்கூத்து என்று வழங்கப்பட்டது போல, தமிழர்கள் நடித்து வந்த கூத்துத் தமிழக்கூத்து ஆகும். தமிழர் தம் மொழியினைப் பகுத்துக் கொண்ட முறையாகிய இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்ற மூன்றில் நாடகத் தமிழினையும் ஒன்றாகப் பகுத்துக் கூறிக்கொண்டதிலிருந்து தமிழர் நடிப்புத் திறனிலும் நனிமிகச் சிறந்தவர் என்பது தெள்ளத்தெளிய உணரும் உண்மையாகும். தமிழினைச் "சங்கத் தமிழ் மூன்றும் தா" என்று குறிப்பிட்டுள்ள கூற்றினையும் காண்க.

தமிழ் மக்கள் தாங்கள் நடத்திய கூத்தினைச் சில சட்ட திட்டங்களுக்குட்பட்டு நடத்தியிருக்க

மாட்டார்கள் என்று கருத இயலாது. அவர்கள் நடத்தும் கூத்துக்கள் இந்திந்த முறைப்படி இருத்தல் வேண்டும் என்பதற்காக இலக்கண நூல்களையும் யாத்து அமைத்திருந்தார்கள். இக்கூத்தின் இலக்கணங்களை அகத்திய முனிவர் யாத்த அகத்தியம் என்னும் நூலிற் காண லாம். இவ்வகத்தியம், இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ்க்கும் இலக்கணம் வகுத்த நூல் என்பர். மேலும், **கூத்த நூல்** என்ற பெயரு டைய தனி நூலும் நம் தமிழகத்தில் இருந்திருக் கிறது. இப்பகுப்பில் **சயந்தம்**, செயிற்றியனார் எழுதிய **செயிற்றியம், நூல்** என்னும் பெயருடைய நாடக நூல், ஆதி வாயிலார் என்பவர் எழுதிய **பரத சேனுபதீயம், பரதம்,** மதிவாணர் என்னும் பாண்டியர் ஒருவரால் செய்யப்பட்ட **மதிவாண ஞர் நாடகத் தமிழ் நூல், முறுவல்** என்னும் நூல் களும் அடங்கும். இவ்வாறு இலக்கிய இலக்க ணங்களோடு தமிழக்கூத்து அமைந்திருக்கு மாஞல், தமிழர் நாடகம் நடத்துதலில் ஈடும் எடுப்பும் அற்று விளங்கினர் என்பதில் எள்ள ளவும் ஐயம் இல்லை அல்லவா ? இந்தத் தொழி லினைச் சிறப்பாக இங்குக் கூறப்பட்ட புலவர் மேற்கொண்டு இருந்தமையினல் இவர் தமிழக் கூத்தஞர் என்றே வழங்கப்பட்டனர்.

இப்புலவர் வாழ்ந்த இடம் மதுரையாகும். அவ்வூர்ப் பெயரையும் இணைத்து இவர் மதுரைத் தமிழக் கூத்தஞர் என்று வழங்கப் பட்டனர்.

மதுரையின் மாண்பைத் தமிழ் நூல்கள் பல வற்றுள்ளும் பரக்கக் காணலாம். மதுரை மிகு பழமை வாய்ந்த ஊர். இவ்வூர் பாண்டி நாட்டுத் தலைநகர். இத்தலை நகரின் பழமையை மாணிக்க வாசகர் புலப்படுத்தும்போது, "பாண்டி நாடே பழம்பதி யாகவும்" என்றே பாடிச் சிறப்பித் துள்ளார். மதுரையம்பதியின் மாண்பை இன்னது என்று எடுத்துக் காட்டும் பாடல்களாகத் தனித்த முறையில் **பரிபாடல்** என்னும் நூலில் சில பாடல்கள் காணப்படுகின்றன. இப்பாடற் கருத்துக்களை மட்டும் உணர்ந்தாலே மதுரையின் மாண்பை உணர்ந்தவர் ஆவோம். மதுரையம் பதியையும் உலகம் முழுமையையும் புலவர்கள் தங்கள் அறிவாகிய தராசினுல் நிறுத்துக் காணும் போது நிறையில் உலகம் குறைந்தும், மதுரை ஏற்றம் மிக்கும் காணப்படும் என்ற பொருளில்,

> **'உலகம் ஒருநிறையாத் தானோர் நிறையாப்**
> **புல்வர் புலக்கோலால் தூக்க—உலகனைத்தும்**
> **தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவன்**
> **நான்மாடக் கூடல் நகர்.'**

என்று பாடப்பட்ட பாடலால் மதுரையின் சிறப் பைக் காணலாம். இம்மதுரையம்பதி தமிழ் நாட்டகம் எல்லாம் நின்று நிலவும் புகழ் உடை யது என்றும், திருமகள் தன் நெற்றியில் தீட்டும் திலகம் போன்றது என்றும், மற்றும் பலவாருக வும் சிறப்பிக்கப்பட்டுள்ளது. இம்மதுரையிலும் இதைச் சார்ந்த திருப்பரங்குன்றத்திலும் வாழ் வாரே நல்வாழ்வு பெற்றவர். தேவர் உலகில்

வாழ யாரும் அங்குச்செல்ல விரும்பார் என்றும், இம்மதுரையில் வாழும் மக்கள் கொடையாளிகளைக் கொண்டாடியும், இரவலர் வருகையினை இன்முகத்துடன் எதிர் நோக்கியும் நிற்பார்கள் என்றும் நம் முன்னோர் கருதியிருக்கின்றனர். இங்ஙனம் கருதிய கருத்தினை,

> **“ஈவாரைக் கொண்டாடி ஏற்பாரைப் பார்த்துவக்கும்**
> **சேய்மாடக் கூடலும் செவ்வேள் பரங்குன்றும்**
> **வாழ்வாரே வாழ்வார் எனப்படுவார் : மற்றையார்**
> **போவார்ஆர் புத்தேள் உலகு ?”**

என்று பாடியும் அமைத்துள்ளார். சேய்மாடக் கூடல் என்னும் தொடர் மதுரையின் வான்அளாவிய மாடமாளிகையின் சிறப்பையும் அறிவித்திருப்பதையும் உற்றுநோக்குக, இன்னோரன்ன சீரும் சிறப்பும், பேரும் புகழும் உடைய மதுரையில் தமிழக் கூத்தனார் வாழ்ந்தார் என்றால், இவர் சீரியரே ஆவார். இப்புலவர் புத்திரப்பேற்றைப் புரையறப் பெற்றவர். இவர்க்குப் புத்திரசிகாமணிகளாய் விளங்கியவர்கள் **கடுவன் மள்ளனார், நாகன் தேவனார்** என்பவர்கள். மதுரைத் தமிழக் கூத்தனார் புலவர் என்பது இவர் பாடியுள்ளனவாக அகநானூற்றிலும் புறநானூற்றிலும் உள்ள பாடல்களால் நன்கு உணரலாம். புறநானூற்றில் ஒரு பாடலும், அகநானூற்றில் மூன்று பாடல்களும் இவர் பெயரால் காணப்படுகின்றன. இங்கு நாம் புறநானூற்றுப் பாடலில் இவர் கூறியுள்ள கருத்தில் நம் கருத்தைச் செலுத்துவோமாக :

இப்புலவர் பாடியுள்ள புறநானூற்றுப் பாடல் **மூதின்முல்லை** என்னும் துறையினைச் சார்ந்தது. மூதின்முல்லையாவது, வீரமகனுக்கேயன்றி, அவ் வீரக் குடியில் பிறந்த மகளிர்க்கும் வீரச்சினம் உண்டு என்பதை விதந்து கூறுதலாகும். இப் பாட்டில் சதிபதிகள் தம்மை நாடி வந்தவர்க்கு நிரம்பப் பொருள் உதவியும், உணவு உதவியும் வந்த கொடையாளர்கள் என்பது தெரிகிறது. "காதல் மனையாளும் காதலனும் மாறின்றித் தீதில் ஒரு கருமம் செய்பவே," என்பதற்கு இங்குக் கூறப்பட்ட தலைவன் தலைவியர் ஓர் எடுத்துக்காட்டு என்றுகூடக் கூறலாம்.

இங்குக் கூறப்பட்ட வீரன் மனைவி பாணரை உண்பித்தாள்; பரிசிலரை ஓம்பினாள்; ஊண் கொடுத்து உபசரித்தாள் என்பதை அப்பாடல்,

> **" மனையோள் பாணர் ஆர்த்தவும்**
> **பரிசிலர் ஓம்பவும் கை தூவாள் "**

என்று கூறுகிறது. இதன் பொருள், "இல்லக் கிழத்தியாகிய வீரன் மனையாள் பாணரை வயிறு நிறைய உண்பிக்கவும், பரிசிலரைப் பாதுகாக்கவும் கையொழியாள்," என்பதாம்; அதாவது, கைக்குச் சிறிதும் ஓய்வு கொடாமல் இடையறாது ஈந்து வந்தாள் என்பதாம். இவளைப் போலவே, வண்மை மிக்க வேலைத் தாங்கிய இவள் கணவனும் ஈந்து கை ஓய்ந்திலன் என்பதை,

"பரிசில் பரிசிலர்க்கு ஈய
உரவுவேல் காளையும் கைதூ வானே."

என்னும் அடிகள் உணர்த்தி நிற்கின்றன. சிறு பிள்ளைகள் ஓய்ந்த நேரத்தில் வெளி இடங்களில் விளையாடிக்கொண்டும் ஆரவாரம் செய்துகொண்டும் இருப்பார்கள் என்பதைப் "புன்தலைச் சிறுஅர் மன்றத்து ஆர்ப்பு" என்னும் அடி அறிவித்திருப்பதைப் படிக்கும் போது சிறு கிராமத்தின் இயற்கைக் காட்சி நம் கண்முன் தோன்றுகிறதல்லவா?

நம் புலவர் பெருமானுர் உவமை கூறுவதிலும் சிறந்த புலமை மிக்கவர் என்பதையும் நாம் அறிந்து இன்புற வேண்டும். புலவர் சிறு முயலை வருணிக்க விரும்புகிறுர்; அம்முயலின் உடலில் அமைந்த மயிர்க்கு உவமை கூறக் கருதினுர். அப்படிக் கருதிய இவர்க்கு **கண்பு** என்னும் ஒரு வகைக் கோரை நினைவிற்கு வருகிறது. அதனையே இவர் உவமையாக்கிப் பாடியுள்ளார். இவ்வாறு கண்பு என்னும் கோரையைப் போன்ற மயிரை யுடைய முயல் சிறு முயலாய் உடற்சிறுமைக்கு ஏற்பக் குறுகிய தாளையுடையதாய் இருந்தது என்று கூறி, உடற்குறுகலும், தாட்குறுகலும் இருந்தாலும், நீண்ட செவியுடையதாய் இருந் ததை மறவாமல், "நெடுஞ்செவிக் குறுமுயல்" என்று வருணித்து, அது வைக்கோற்போரில் சென்று ஒதுங்கும் நிலையினையும்,

[ 34 ]

**"காமரு பழனக் கண்பின் அன்ன
தூமயிர்க் குறுந்தாள் நெடுஞ்செவிக் குறுமுயல்
படப்புஒடுங் கும்மே."**

என்ற அடிகளில் அமைத்திருப்பது நம் கண் முன்னே ஒரு முயலின் தோற்றத்தையும் செயலையும் படம் பிடித்துக் காட்டுவது போன்றல்லவோ இருக்கின்றது! புலவர் அகநானூற்றிலும் இத்தகைய சொல்லோவியங்களை அழகாகத் தீட்டியிருப்பார் என்பதை நாம் கூறவும் வேண்டுமோ? நீங்கள் பின்னர் அப்பாடலையும் படிக்க முயல்வீர்களாக.

# 5. வடமவண்ணக்கன்

# பெருஞ்சாத்தனர்

சாத்தன் என்பது ஒரு தெய்வத்தின் பெயர். இத்தெய்வப் பெயர் பூண்ட புலவர் பலர் நம் தமிழ் நாட்டில் இருந்திருக்கின்றனர். நம் முன் ஞோர் இயற்பெயராகிய சாத்தன் என்பதற்கு முன் சில அடைமொழிகளைச் சேர்த்தே இப் பெயருடைய புலவர்களைக் குறிப்பிட்டு வந்தனர். அந்த முறையில் இங்குக் குறிப்பிடப்படும் புலவர் **பெருஞ்சாத்தனர்** என்பவர் ஆவர். இவர்க்கு அமைந்த அடைமொழிச் சிறப்பால் இவர் பெருமை பெற்றவர் என்பது புலனுகிறது. அப் பெருமை இவர்க்கு எக்காரணம் பற்றி வந்தது என்பதை அறுதியிட்டு உறுதியாகக் கூற இய லாது. அப்பெருமை கல்வி காரணத்தாலோ, அல்லது இவர் மேற்கொண்ட தொழிற்காரணத் தாலோ, மற்று யாதாலோ, அறிந்துகொள்ளு தற்கு இல்லை. இவர் மேற்கொண்ட தொழில் நாணயப் பரிசோதனைத் தொழிலாகும். "இந் நாணயம் நல்ல தங்கத்தால் இயன்றதா, நல்ல வெள்ளியால் அமைந்ததா? அரசாங்க முத்திரை அமையப் பெற்றுச் செலாவணிக்குத் தகுதி யுடையதா, இது பொய்ந்நாணயமா?" என்பன போன்ற பரிசோதனைத் தொழிலை மேற்

கொண்டவர் ஆவர். இதனால் இவர் அரசாங்கத்தில் தொழில் புரிந்தவர் என்று கருதலாம்.

"இவர் இத்தொழிலினை மேற்கொண்டவர் என்பது எப்படித் தெரிகிறது?" என்று நீங்கள் கருதலாம். இது **வண்ணக்கன்** என்று இப்புலவர் பெயர்க்கு முன் அமைந்த அடைமொழியால் அறியப்படுகிறது. வண்ணக்கன் என்னும் சொல்லுக்கு 'நாணயப் பரிசோதகன்' என்ற பொருளினை உரை ஆசிரியர் எழுதியிருக்கின்றனர். இதனை இப்பொருளில் காண விழைவார் ஐஞ்சிறுகாப்பியங்களுள் ஒன்றாகிய **நீலகேசி** என்னும் நூலின் உரையில் கண்டு உணர்வாராக. பெருஞ்சாத்தனார் நாணயப் பரிசோதகர் பணியினை மேற்கொண்டவர் என்பதை உணர்ந்தோம். இக்காலத்தில் நாணயப் பரிசோதகரை 'நோட்டக்காரர்' என்று வழங்குவதையும் இந்தத் தருணம் நினைவில் கொள்ளுதல் பொருத்தமாகும், இன்னமும் இவருடைய பெயரைப் பற்றிய ஒரு குறிப்பினையும் நாம் உணர வேண்டியவர்களாய் உள்ளோம். அதாவது, இவர் வடநாட்டினின்று தென்னாட்டிற்கு வந்து சேர்ந்த புலவர் என்பதாகும். இந்தக் குறிப்பு இவர் வண்ணக்கன் பெருஞ்சாத்தனார் என்ற அளவில் குறிப்பிடப் பெறாமல், **வடம** வண்ணக்கன் பெருஞ்சாத்தனார் என்று குறிப்பிடப்பட்டிருத்தலால் புலனாகும். வடமன் என்னும் சொல் வடதிசையிலிருந்து வந்தவன் என்னும் பொருளையுடையது.

அடுத்தாற்போல நாம் காண வேண்டுவது வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனர் ஒரு புலவர் என்பதாகும். இவர் புலவர் என்பதற்கு அடையாளம் இவரது பாடல் புறநானூற்றில் காணப்படுவதே அன்றி வேறன்று. அப்புறநானூற்றிலும் இவரால் பாடிய ஒரே பாட்டு மட்டும் காணப்படுகிறது. அப்பாட்டுத் **தேர் வண் மலையனைப்** பற்றி இவர் பாடிய பாடலாகும்.

தேர் வண்மலையன் என்பவன் சிறந்த வீரன். ஒருமுறை **சோழன் இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளிக்கும், சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறைக்கும்** நடந்த போரில், தேர்வண் மலையன், சோழன் இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளியின் சார்பில் நின்று சேரமான் மாந்தரஞ்சேரல் இரும்பொறையோடு பொருது அவனை வென்றவன். இதனுல் இத்தேர் வண்மலையன் சிறந்த வீரன் என்பது புலப்படுகிறதல்லவா? இவ்வீரன் கொடைக்குணத்திலும் சிறந்திருந்தவன் என்பதை வண்மலையன் என்ற பெயர் அறிவித்து நிற்கிறது. இவனைப் பற்றிப் பெருஞ்சாத்தனர் என்ன கூறியுள்ளார் என்பதை நாம் படித்து அறிந்துகொள்ளுதல் இன்றியமையாதது. இவன் பகைவரது வலியைத் தொலைத்த வலிய ஆண்மையுடையவன்; அவ்வலியோடு தனது முயற்சியால் தேடிய பொருளைத் தானே உண்டு களித்து உறங்காமல் அதனை யாவர்க்கும் கொடுத்துத் தானும் உண்பவன். இத்

தேர் வண்மலையன் நட்பரசர்களாலும் பகை அரசர்களாலும் புகழப்பட்ட பெருமை சான்றவன். இவன் தன்னை அடைந்தோர்க்குப் பசி தீர உணவு அளித்து உபசரிப்பவன். இன்னோரன்ன சிறப்புடையவன் என்று இப்புலவர் இவனைப் புகழ்ந்து பாடுகிறார்.

இப்புலவர் பாடலில் ஓர் அழகிய உவமை காணப்படுகிறது. அது நிலத்தை உழுத எருதானது, உழுததனால் விளைந்த நெற்கதிர்களைத் தின்னாமல், வைக்கோலை மட்டும் தின்பது போல, இவ்வீரனும் தன் முயற்சியால் வந்த பொருளைத் தான் முன் உண்ணாமல், பிறர்க்கு ஈந்து எஞ்சியதை உண்பவன் என்பது. இந்த அழகிய கருத்தைப் புலவர், "உழுத நோன்பகடு அழிதின்றாங்கு" என்று சுருங்கிய அடியில் விளங்க வைத்துள்ளார். முருகப்பெருமான் எப்படி அன்பர்களை அறிந்து அருள் செய்பவனாயும் அசுரர்களை அழிப்பவனாயும் இருக்கின்றானோ, அப்படி இத்தேர் வண்மலையன் நண்பர்க்கு உதவுவோனாயும் பகைவர்க்குக் கூற்றுவனாயும் இருந்தவன் என்பதை நன்கனம் விளக்கக் கருதிய பெருஞ்சாத்தனார், தேர் வண்மலையனுக்கு முருகப் பெருமானை ஒப்பாக மொழிந்துள்ளார். இதனை இப்புலவர்,

**"திருத்தகு சேஎய்நின் பெற்றிசி னோர்க்கே."**

என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்புலவர் பெருமானுர் ஒரு சிறிய பாட்டில் எவ்வளவு அரிய குறிப்புக்களைப் பாடி அமைத்துள்ளார், பார்த்தீர்களா !

# 6. வடம வண்ணக்கன் பேரி சாத்தனர்

இப்புலவர் பெருந்தகையாரும் நோட்டத் தொழிலை மேற்கொண்டவர் ஆவர். அதாவது, நாணயப் பரிசோதகர் பணியினைத் தம் வாழ் நாள் பணியாகக் கொண்டவராவர். இவ்வறிஞரும் வடநாட்டினின்றும் தென்னடு வந்து வாழ்வு நடத்தியவர். இந்தக் குறிப்புக்கள் யாவும் இவரது பெயர்க்கு முன்னுள்ள **வடம வண்ணக்கன்** என்னும் அடைமொழிகளால் அறியப் படுவனவாகும். 'வடம வண்ணக்கன்' என்னும் தொடருக்குப் பொருள் விளக்கம் இங்குக் கூற வேண்டுவதில்லை. இத்தொடர்ப் பொருள் முன்னரே விளக்கப்பட்டுவிட்டது. இனி, நாம் இப்புலவர் பெருமான் பெயரைப் பற்றி ஆராய வேண்டுவது யாதெனில், இவரது இயற்பெயராகிய சாத்தனர் என்னும் பெயர் முன் **பேரி** என்னும் அடைமொழி இருப்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டுவதே.

பேரி என்பது ஒரு வாத்தியம். இது தோற் கருவி, துளைக் கருவி, நரம்புக் கருவி, கஞ்சக் கருவி என்று கூறப்படும் வாத்தியக் கருவிகளுள் தோற்கருவியாகிய இயத்தைச் சேர்ந்ததாகும். இப்பேரி ஈண்டு முழவு என்ற பொருளில் ஆளப்

பட்டுள்ளது. முழவாவது, இக்காலத்தில் நாம் காணும் மத்தளமாகும்.

பேரி சாத்தனர் கடலின் ஒலியைச் சிறப்பிக்க எண்ணினர்; அவ்வொலியினை உவமை வாயிலாக உரைக்க விரும்பினர்; அவ்வொலிக்கு உவமையாக முழவின் ஒலியைக் கூறியுள்ளார். இல்வாறு இவர் கூறியுள்ளதை, நற்றிணையில் இவர் பாடியுள்ளதாகச் சேர்க்கப்பட்ட பாடலில், "தெண்கடல், முழங்குதிரை முழவின் பாணியில்" என்ற அடியில் காணலாம். இவ்வாறு இப்புலவர், கடல் ஒலிக்கு முழவின் ஒலியினை உவமை கூறிய காரணத்தால், இவர் **பேரி** சாத்தனர் என்று சிறப்பிக்கப்பட்டனர் என்று நாம் கருத இடமுண்டு. இவ்வாறு தாம் பாடிய பாடல்களில் ஏதேனும் அரிய குறிப்புத்தோன்ற ஓர் அடைமொழியினை அமைத்துப் பாடியிருப்பாராயின், அவ்வடைமொழி காரணமான பெயரே தம் பெயராக வழங்கப்பட்டு வரும் பேறு பெற்ற புலவர் நம் தமிழகத்தில் உண்டு. இதற்குதாரணமாகப் புலவர் பலர் பெயர்களை எடுத்துக் காட்டலாம் எனினும், ஒருவர் பெயரைக் காட்டுதலே போதுமானதாகும். அவர் **இரும்பிடர்த் தலையார்** என்பவர். அவர் யானையின் பிடரை 'இரும்பிடர்த் தலை' என்று சிறப்பித்தமையினல் இப்பெயர் பெற்றார். எனவே, வடம வண்ணக்கன் பேரி சாத்தனர் என்னும் முழுப் பெயர்க்கும் காரணம் கண்டோம். இனி,

இப்புலவரைப் பற்றிய ஏனைய சிறப்புக்களையும் நாம் உணர்தல் வேண்டும்.

வடம வண்ணக்கன் பேரி சாத்தனார் புலவர் என்பதற்குச் சான்று, இவர்தம் பாடல்கள் அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகிய தொகை நூல்களில் சேர்க்கப்பட்டிருப்பதேயாகும். நாம் ஈண்டுப் புறநானூற்றில் இவர் பாடியுள்ள பாடற்கருத்தினை மட்டும் பார்ப்போம் :

இப்புலவர் **பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன்** என்பானைப் பாடியுள்ளார். இப்பாண்டியன் தமிழ் நாட்டு மன்னர்களுள் மேம்பட்டு விளங்கியவன். இவன் புலவர் பலராலும் பாடப்பட்ட பெருமை மிக்கவன். இவனை **இடைக்காடனார், ஆவூர் மூலங்கிழார், நக்கீரனார்** போன்ற புலவர் பெருமக்கள் பாடியுள்ளார்கள். இவன் நல்ல வள்ளன்மைப்பண்பும், பகைவரை வெல்லும் ஆற்றலும் படைத்தவன். செங்கோல் செலுத்தி நாட்டை ஆண்ட நல்லரசன். இவன் தன் நாட்டைக் கண்ணும் கருத்துமாக ஆட்சி செய்த முறைமையைப் 'புலி தன் குட்டியைப் பாதுகாப்பது போலத் தன் நாட்டை ஆண்டு, குடி மக்களைக் காப்பவன்' என்று புலவர் கூறிச் சிறப்பித்துள்ளார். இவ்வுவமையால் இவன்பால் அன்பும் வீரமும் ஒருங்கே அமைந்த நிலைமை புலப்படுகிறது.

"புலிபுறம் காக்கும் குருளை போல
மெலிவில் செங்கோல் நீபுறம் காப்ப"

என்பன இவன் ஆட்சியின் சிறப்பைக் காட்டும் அடிகள்.

இப்பாண்டியன் முடியுடை மூவேந்தருள் மேம்பட்டவன் என்பதை மகிழ்வுடன் கூற வந்த புலவர், 'இறைவன் நெற்றிக் கண் போல மேம்பட்ட பூ மாலையுடையவன்' என்று சிறப்பித்ததனுல் நன்கு உணரலாம்.

"பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல
வேந்துமேம் பட்ட பூந்தார் மாற!"

என்னும் அடிகளே இதனை விளக்கி நிற்கும்.

இம்மன்னனது புகழினைப் புலவர் பிறர் கூறியுள்ள பாடல்களிலும் பரக்கக் காணலாம். இத்தகைய பெருமை சான்ற நன்மாறனைப் பேரிசாத்தனுர் எம்முறையில் பாடியுள்ளார் என்பதை இங்குக் கவனிப்போம். இனி வரும் கருத்துக்கள் பேரி சாத்தனுர் இலவந்திகைத்துஞ்சிய நன்மாறனைப் பற்றிக் கூறிய கருத்துக்களாகும்.

நன்மாறனுக்கு வாய்த்த மனைவி கற்புடை நல்லாள். அவள் 'கடவுள் சான்ற கற்பின் சேயிழை' என்று போற்றப்படுகிருள். இம்மன்னன் பிள்ளைப் பேற்றையும் பெற்ற பெருந்தகை. இது இப்புலவர் வாழ்த்தும் முறையிலிருந்து அறியப் படுகிறது. இப்புலவர் இம்மன்னனை வாழ்த்தும்

போது இம்மன்னன் புதல்வர்களையும் உளமார வாழ்த்துகிறார். "அப்புதல்வர்கள் இந்நன் மாறன் முன்னோர்களைப் போலத் தாட்சணியம் உடையவர்களாய் வாழ்வார்களாக" என வாழ்த்துகிறார். இந்த அளவிலும் தம் வாழ்த்துரையினை இவர் நிறுத்தவில்லை. "நன்மாறன் பெற்ற பிள்ளைகளும், பிள்ளைகளைப் பெற்று வாழ வேண்டும்!" என்று கருதி வாழ்த்துகிறார். "இப் பேரர்களைக் கண்டு களிக்கும் அளவுக்கு இந் நன்மாறன் நீண்ட ஆயுளைப்பெற்று விளங்குவானாக!" என்று கூறி இவனது வாழ்நாள் வளர் வதை இப்புலவர் மிகவும் விரும்பியிருக்கிறார். இதனை இப்புலவர் வாழ்த்துரைகளாகிய,

> **"பெருங்கடல் நீரினும் அக்கடல் மணலினும்**
> **நீண்டுயர் வானத்து உறையினும் நன்றும்**
> **இவர்பெறும் புதல்வர்க் காண்டொறும் நீயும்**
> **புகன்ற செல்வமொடு புகழ்இனிது விளங்கி**
> **நீடு வாழிய நெடுந்தகை !"**

என்னும் இவ்வடிகளிற்காணலாம்.

"நீ இவ்வாறு கடல் நீரைவிடவும், கடல் மணலைவிடவும், வானத்தின் மழைத்துளியை விடவும் பல நாள்களைப் பெற்றுச் செல்வச் சிறப்புடன் வாழ்ந்தால் நானும் பலநாள் வாழ்வேன்," என்று கூறும் இவர் வார்த்தைகள் இன்பம் தரும் வார்த்தைகளாகும். இப்புலவர் இந்நன்மாறனது பொருட்கொடையினை நச்சியிருந்தார் என்பது இவர் குறிப்பிடும் உவமையால் விளங்குகிறது.

வானம்பாடி நீர்த்துளியை நச்சி வாழ்வது போலத் தாம் இப்பாண்டியன் பொருளை நச்சி வாழ விரும்பியதாக அன்றோ கூறுகிறார்?

**" துளிநசைப் புள்ளின் அளிநசைக்கு இரங்கி "**

என்ற அடியினைக் காண்க.

இப்புலவர் இந்நன்மாறனிடத்தில் பெருமதிப் புக்கொண்டிருந்தார்; இவனைத் தம் கனவிலும் மறவாது பாராட்டியுள்ளார். இதனை இவரே,

**" திண்தேர் அண்ணல் நின்பா ராட்டிக்**
**காதல் பெருமையில் கனவிலும் அரற்றும்எம்**
**காமர் நெஞ்சம்."**

என்று குறிப்பிடுகிறார்.

இம்மன்னன் பெருஞ்செல்வனாய் விளங்கினன் போலும்! இவனது செல்வப் பெருக்கத்தினைப் புலவர் திருமாலுக்குள்ள செல்வம் என்று சிறப் பித்துள்ளார், " ஆல் அமர் கடவுள் அன்ன நின் செல்வம் " என்பது இப்புலவரது அன்புமொழி. நன்மாறனுடைய முன்னோரும் நல்ல வல்லமை படைத்தவர். அவர்கள் பகைவர்களை வென்று பொருள்களைக் கொணர்ந்து தங்கள் நாட்டில் குவித்தவர்கள். அந்த வீரம் வாய்ந்த முன்னோர் மேம்பாடு,

**" ஒன்னார் வாட அருங்கலம் தந்துநும்**
**பொன்னுடை நெடுநகர் நிறைய வைத்தநின்**
**முன்னோர் "**

என்னும் அடிகளால் பெறப்படுகிறது. இந்த

வீரம் இப்பாண்டியன்பாலும் மிக்குக் காணப் பட்டது.

" தண்தமிழ் வரைப்பகம் கொண்டி யாகப்
பணித்துக்கூட் டுண்ணும் தணிப்பருங் கடுந்திறல் "

என இவ்வாறெல்லாம் இப்புலவர் இலவந்திகைத் துஞ்சிய நன்மாறனையும், அவன் முன்னோரையும், அவன் புதல்வர்களையும், அப்புதல்வர்களின் புதல்வர்களையும் புகழ்ந்து வாழ்த்தித் தமக்குப் பொருட்கொடையினை மறவாது ஈயுமாறு கூறிப் பொருள் வேண்டி வாழ்ந்தார்.

# 7. வடம வண்ணக்கன் தாமோதரனுர்

தாமோதரனுர் என்னும் புலவரும் நாணயப் பரிசோதகத் தொழிலினை மேற்கொண்டவரே. இவரும் வடநாட்டினின்றும் தென்னுட்டிற்குவந்து குடியேறியவர் ஆவர். இவ்விரண்டு குறிப்புக் களையும் இவர் இயற்பெயராகிய தாமோதரனுர் என்னும் பெயர்க்கு முன்னர் அமைந்த அடை மொழிகளே நமக்கு அறிவுறுத்தி நிற்கின்றன. இவ்வடைமொழிகளின் பொருள் பெருஞ்சாத் தனுர் என்னும் புலவர் பெருமகனுரைப் பற்றிக் கூறியிருக்கும் இடத்தில் நன்கு விளக்கப்பட் டுள்ளது.

இப்புலவரின் பெற்ருேர் சிறந்த திருமால் பத்தராய் இருக்க வேண்டும். இதனை இப்புலவர் கொண்டுள்ள பெயர் மூலமாக உணர்கிருேம். தாமோதரனுர் என்பது திருமாலுக்குரிய பெயர் களுள் ஒன்று. தாமோதரன் என்ற பெயர் திருமாலுக்கு அமைந்து வருதலை நாலாயிர திவ் வியப் பிரபந்தத்தில் பல இடங்களிற் காணலாம். காண விழைவார் ஆண்டுக் கண்டு இன்புறலாம். திருமகள் கேள்வனும் திருமாலின் திருப்பெயரை இப்புலவர் தம் இயற்பெயராகக் கொண்டிருத்

தலின், இவர் திருமால் நெறியினர் என்பதை நாம் உளம் கொளல் வேண்டும்.

இப்புலவர் பெருமானுர் செய்யுள் இயற்றிப் புலவர் வரிசையில் அமைந்த புலமை மிக்கவர் என்பது, இவர் பாடல் புறநானூற்றிற் காணப் படுவதன் மூலம் அறிய வரும் செய்தியாகும். இவர் ஒரே பாடலைத்தான் பாடியிருக்கிருர். அப்பாடல் புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது. அப்பாடல் **பிட்டங்கொற்றன்** என்பவன்மீது பாடப்புட்டதாகும்.

பிட்டங்கொற்றன் என்பவன் குதிரை மலைக் குத் தலைவன். இவன் சிறந்த வீரன். இவன் வீரனுய் இருந்த காரணத்தாலேதான் சேர மன்னனது சேனையின் தலைவனுயும் இருக்க நேர்ந்தது. இவன் சிறந்த கொடையாளியும் ஆவன். இவன் புலவர்களால் பாடப்பெறும் பீடும் பெற்றவன். இவனைப் பாடிய புலவர்கள் **கருவூர்க் கந்தப்பிள்ளை சாத்தனுர், காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனுர், உறையூர் மருத்துவன் தாமோதரனுர்** என்பவர் ஆவர்.

இவனது நாட்டில் மக்கள் உணவுக்குக் குறை வின்றி உண்டுவாழ்ந்தார்கள். இவனதுகொடை, கொடைக் குணம் இல்லாதவரை நாணச் செய் தது என்று சிறப்பிக்கப்பட்டது. அதாவது, அந்த அளவுக்குப் பெருங்கொடை புரிந்தவன் இவன் என்பது பொருள். இவன் தன் படை

போருக்குப் போகும் போது, அப்படைக்கு முன்னே செல்லும் வீரமிக்கவனுவன். இதனுல் இவன் படையினை எதிரிகளின் படை எதிர்க்க முடியாமல் இருந்தது. இவன் போரில் மிகுதியாய் ஈடுபட்டதனுல், இவனைத் தன் நாடாகிய குதிரை மலையில் காணுதல் என்பது அரிதாகும் என்றும் கூறப்பட்டுள்ளான். இன்னமும் இவனது சொடையும் வீரமும் மிகுதியாகப் புலவர்களால் பாடப்பட்டுள்ளன. இவன் கொடையினைக் காரிக்கண்ணனுர் மிகமிகச் சிறப்பாகப் போற்றிப் பாடியுள்ளார். இவன் கொடுக்கும் நேரம், குறிப்பிட்ட ஒரு நேரம் அன்று. இவன் இரப்பவர் என்று சென்ருலும், எப்பொழுது சென்ருலும் கொடுத்து வந்த கொடையாளி; ஒரு முறை சென்று பரிசு பெற்றவர் பின்னரும் இவனைத் தேடிப் பரிசு பெற வந்துற்ருலும், "முன்னரே பரிசு பெற்றுள்ளீரே! மீண்டும் ஏன் பரிசில் பெற இங்கு வந்தீர்?" என்று கூறி இரவலர் மனத்தைப் புண்படுத்தாத புண்ணியன்; தினந்தினம் சென்று கேட்பினும், ஈயும் இன்குணம் படைத்தவன். இவன் தன் கடமையை மிக நன்ருகச் செய்தவன்; தான் பணிபுரிந்த சேரமன்னன் உளங்களிக்கும் வண்ணம் போர் செய்து புகழ் பெற்றவன். இவனை நாடி வந்தவர் இவனது மாட்டுத் தொழுவத்தில் காணப்படும் மாட்டின் தொகுதியை ஒரு சேரத் தமக்கு வேண்டும் என்று கேட்டாலும் சிறிதும் தயக்கம் இன்றி, ஒன்றேனும் தனக்கு இருக்கட்

டும் என்று வைத்துக்கொள்ள எண்ணுமல், கேட்டவர் உளங்களிக்க எல்லா எருதுகளையும் ஈந்து மகிழும் இன்குணன்; இப்படியே இவனது விளைபுலத்தில் விளைந்த நெற்குவியல்கள் அனைத்தையும், "கொடுத்துவிடுக" என்று கேட்பினும் கொடுக்கும் அத்துணை வள்ளன்மை மிக்கவன். இவற்றைவிட இவனது கொடைக் குணத்திற்கு வேறு என்ன கூற இயலும்? இத்தகைய வீரமும் கொடையுமுடைய பிட்டங்கொற்றனை வடம வண்ணக்கன் தாமோதரனுர் எம்முறையில் சிறப்பித்துள்ளார் என்பதை ஈண்டுக் காண்போம்.

வடமவண்ணக்கன் தாமோதரனுர் பிட்டங்கொற்றனைப்பாடி வாழ்த்தும் போது, அவனை மட்டும் வாழ்த்தாமல், அவன் தலைவனுகிய **சேரமான் கோக்கோதை மார்பனை**யும் உடன் சேர்த்து வாழ்த்தியிருப்பது, இவரது பரந்த உள்ளக் கிடக்கையினை உணர்த்தி நிற்கின்றது. அக்கோதையும் வாழ்ந்தால்தான் என்றும் தம்மைக் காக்கும் தலைவனும் பிட்டங்கொற்றனும் நன்கு வாழ இயலும் என்று கருதி, இங்ஙனம் உடன் சேர்த்து வாழ்த்தினுர் போலும்! பிட்டங்கொற்றன் நல்வாழ்வு, தாம் நன்கு வாழ்தற்கு ஏதுவாகும் அல்லவா? இதனுலேதான் புலவர் கோதையையும் வாழ்த்தியுள்ளார்.

பிட்டங்கொற்றனது பீட்டுக்குக் காரணம் அவன் பிடித்திருந்த வேலே ஆகும். அதுவே

பகைவர் உடலங்களைக் கிழித்து அவனுக்குப் பெருமை தந்து வந்தது. ஆகவே, அதனையும் புலவர் உளமார வாழ்த்துகின்றார். ஆ! இப் புலவரது நுண்ணறிவுத் திறனை என் என்பது! பிட்டங்கொற்றனை வாழ்த்தினர். அவனது வேலை வாழ்த்தினர். அவனுக்குத் தலைவனும் சேர மன்னனையும் வாழ்த்தினர். இவ்வாறு வாழ்த்தியது சாலப் பொருத்தமே ஆகும். ஆனால், புலவர் இந்த அளவில் தம் வாழ்த்தைக் கூறி முடித்தார் அல்லர். சேரன் பகை மன்னரும் வாழ்க என்று வாழ்த்தியிருப்பதுதான் இவரது நுண்ணறிவுத் திறனை நாம் நுணுகி ஆராய்தற்குத் துணை செய்வதாகும். பகை மன்னர் பிட்டங்கொற்றனால் கொல்லப்பட்டனராயின், அத்துணைப் பயன் ஏற்படாது. அம்மன்னர்கள் போருக்கு ஆற்றாது தோல்வியுறச் செய்து, பின்னர்த் தம் தோல்விக்கு அறிகுறியாக ஆண்டு தோறும் திறைப்பொருளைக் (கப்பப்பொருளை) கட்டி வருவாராயின், சேரனது பொருள் வருவாய் மிக்கு நிற்கும் அன்றோ? இது குறித்தே "பகை மன்னரும் வாழ்க பல்லாண்டு!" என்று தம் வாழ்த்தினை அவர்களுக்கும் உடன் சேர்த்து உரைத்தனர். இதோ பாருங்கள் இவர் வாழ்த்திய வாழ்த்து மொழிகளை :

**"வன்புல நாடன் வயமான் பிட்டன்**
**ஆரமர் கடக்கும் வேலும் அவன்இறை**
**மாவண் ஈகைக் கோதையும்**
**மாறுகொள் மன்னரும் வாழியர் நெடிதே!"**

என்னும் அடிகளே வாழ்த்து மொழிகள் அடங்கிய அடிகள். "வலிய நிலமாகிய மலைநாட்டையுடையவனும், வலிய குதிரை மலைக்குத் தலைவனும் ஆகிய பிட்டனும், அவனது பொருதற்கரிய போரை வெல்லும் வேலும், அவன் தலைவனாகிய வண்மை மிக்கவனாகிய சேரமன்னனும், அவனோடு பகைத்த வேந்தரும் நெடிது வாழ்க!" என்பதே இவ்வாழ்த்து அடிகளின் பொருள். பிட்டங்கொற்றன்கீழ் வாழுமக்கள் குறைவின்றிக் குதூகலமாய் இருப்பார்கள் என்பதும், இப்புலவர் பாடிய பாடலால் குறிப்பாகத் தோன்றுகிறது. ஆர்வத்தோடு இவர், "ஏற்றுக உலையே! ஆக்குக சோறே! அன்னவை பிறவும் செய்க!" என்று பாடியிருப்பதன் மூலம் இதனை அறியலாம். "அன்னவை பிறவும் செய்க!" என்பது, 'பூசுவன பூசுக பூண்பன பூண்க; உடுப்பன உடுக்க,' என்பதாம். இந்தவிதம் தன்கீழ் வாழ்நரும் தன்னைப் பாடி வருநரும் மகிழும் வண்ணம் பிட்டங்கொற்றன் உதவி புரிந்தவன் என்பது புலனாகின்றதல்லவா? இவை அனைத்தினையும் ஒருங்கே புலப்படுத்திய புலவர் பெருமானார் புலமைப் பெருக்கை நாம் பாராட்டவேண்டும் அன்றோ?

# 8. உறையூர் இளம்பொன் வாணிகனார்

உறையூர் இளம்பொன் வாணிகனார் இயற்பெயர் நமக்குத் தெரிந்திலது ; இவர் மேற்கொண்ட தொழில் காரணமாக ஏற்பட்ட காரணப்பெயரே நமக்குத் தெரிந்துள்ளது. இவர் தம் வாழ்க்கையினை இனிது நடத்த வாணிகத் தொழிலை மேற்கொண்டிருந்தார். அவ்வாணிகமும் பொன்னை விற்றும் வாங்கியும் செய்துவந்த வாணிகமாய் இருந்திருக்க வேண்டும். இவர் பொன் வாணிகம் செய்தவர் என்பது, இவர் 'பொன் வாணிகனார்' என்று குறிப்பிடப்பட்டதனால் உணர்ந்துகொள்ளலாம். இவர் வயதில் முதியவராய் இருந்திருக்கமாட்டார். இவ்வாறு கூறுதற்குக் காரணம், **இளம்**பொன் வாணிகனார் என்று இவர் வழங்கப்பட்டமையால் புலனாகிறது.

இவரது ஊர் உறையூர். அதன் சிறப்பை உறையூர் மருத்துவன் தாமோதரனார் என்னும் புலவர் வரலாற்றிற்காண்க. எனவே, ஊர்ப் பெயரையும் இணைத்து இவர் **உறையூர் இளம் பொன் வாணிகனார்** என்று கூறப்பட்டுள்ளார்.

இவர் ஒரு புலவர் என்பதற்கு அறிகுறி, இவரால் பாடப்பட்ட பாடல் புறநானூற்றில் இடம்

பெற்றிருப்பதே. அப்பாடல் ஒரு *வீரன்மீது பாடப்பட்ட பாடலாகும். அது கையறு நிலை யாய் அமைந்த பாடல். கையறு நிலை என்பது புறப்பொருள் இலக்கணத்தில் வரும் ஒரு துறை யாகும். அது இறந்த ஒருவன் சுற்றத்தாரோ, நெருங்கிய நண்பர்களோ அவன் இறப்பதைக் கண்டு இரங்கிக் கூறுவதாகும்.

இப்புலவர் இங்குக் கூறியுள்ள பாடல் ஒரு வீரன் இறந்து பட்டமையின் அவனை இழந்த மையால் பாணர்கள் படுந்துன்பம் இன்னதாய் இருந்தது என்பதை அறிவிக்கும் முறையில் அமைந்துள்ளது. பாணர் இவன் இறப்பைக் குறித்து வருந்தினர் என்றால், இவ்வீரன் பாணர் களுக்கு உதவும் பெருங்கொடையாளனாய் இருந் திருக்க வேண்டும் என்பது ஊகிக்கப்படுகிறதல் லவா? நாம் ஊகிப்பது போலவே, இவ்வீரன் சிறந்த கொடையாளியாயும் இருந்திருக்கிறான். வீரம் உள்ள இடத்தில் ஈரம் இருக்கும்போலும்! இனி உறையூர் இளம்பொன் வாணிகனார் எம் முறையில் இவ்வீரன் கொடைச்சிறப்பையும் ஏனைய கருத்துக்களையும் கூறியுள்ளார் என்ப தைக் காண்போம்:

இப்புலவர் பெருந்தகையார் தாம் பாடும் கை யறு நிலைத்துறையில் இறந்துபட்ட ஒரு வீர னுக்கு நடுகல் நடப்பட்டதையும் அதற்குச் செய் யப்பட்ட கோலத்தையும் குறித்து நன்கு அறி விக்கின்றனர்.

இறந்தவரின் நினைவுக்கு அறிகுறியாகக் கல் நடுவர். அதனை அமைக்கும் முறையில் மிகுந்த விழிப்புக் கொண்டிருந்தனர் தமிழர் என்பதை நாம் ஈண்டு நினைவுபடுத்திக்கொள்ள வேண்டும். எந்தக்கல் நாட்டுதற்கு உரியது என்பதை முதலில் ஆராய்ந்து, அத்தகைய கல்லைக் கொணர்தற்கு மலை செறிந்த இடத்திற்குச் செல்வர்; அங்கிருந்து கொணர்ந்து அதனைச் செய்வன செய்து செம்மைப்படுத்துவர். இது நடுதல் சிறப்புச் செய்தற்கு முன் செய்யப்படும் முதற் செயலாகும். இதனைக் **காட்சி** என்பர். இரண்டாவதாக, நடுகல்லுக்குச் செய்ய வேண்டிய செயல், **கால் கோள்** விழாவாகும். கால் கோளாவது, இறந்தவன் புகழைக் கல்லில் பொறிப்பது.

மூன்றாவதாகச் செய்யப்படுவது **நீர்ப்படை** யாகும். நீர்ப்படையாவது கால் கோள் விழா நடந்த பிறகு அக்கல்லினை நீராட்டுவது.

இதற்கு அடுத்ததாகக் கல்லினை நடுதற் சிறப்பு நடைபெறும். கல்லினை நடுதலாவது, இறந்தவனது புகழ் பொறித்த கல்லினைப் பூமியில் நடுதல் என்பதாம்.

ஐந்தாவது முறையில் இந்நடுகல்லுக்குச் செய்யப்படும் சிறப்புப் **பெரும்படை** என்பது. பெரும்படையாவது, நட்ட கல்லைத் தெய்வமாக்கி அதற்குமுன் சிறப்புடைப் பொருள்களைப்

படைத்தலாகும். இக்காலத்தில் இதனைப் 'படையல் போடுதல்' என்று கூறுகின்றனர்.

இறுதியாக இந்நடுகல்லிற்குச் செய்யப்படும் சிறப்பு, **வாழ்த்து** என்று கூறப்படும். வாழ்த்தாவது, இறந்த வீரன்பொருட்டு அவன் நினைவுக்கு அறிகுறியாக நடப்பட்ட கல்லில் அவனுடைய பெயரும் பீடும் எழுதி நிலைநாட்டிய பின், அக்கல்லினை வெறுங்கல் என்று எண்ணுமல், அது தெய்வம் என்று கருதி, அதனைத் தெய்வமாக்கி வாழ்த்துவதாகும். ஆகவே, இறந்தவர்பொருட்டு நடுகல் அமைத்தல் என்பது, காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல், பெரும்படை, வாழ்த்தல் என்ற இவ்வறுவகைச் சிறப்புக்களையும் முறையாகச் செய்வது என்பதை நாம் அறிதல் வேண்டும். இம்முறைப் படியே நம் முன்னோர்களான தமிழ்ப்பெருமக்கள் நடுகற்சிறப்பினை நடத்தி வந்தார்கள். அவர்கள் இவ்வாறு நடத்தி வந்தார்கள் என்ற ஒழுக லாற்றையே ஒல்காப் பெருமை வாய்ந்த தொல்காப்பியர், தம் இலக்கணமாகிய தொல்காப்பியத்துப் பொருள் அதிகாரத்தில்,

> 'காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல்,
> சீர்த்தகு சிறப்பிற் பெரும்படை, வாழ்த்தல்என்று
> இருமூன்று வகையில் கல்லொடு புணர'

என்று நூற்பா ஒன்றில் விளக்கமாகக் கூறியுள்ளார்.

இத்தகைய நடுகல் விழா உறையூர் இளம் பொன் வாணிகனுர் குறிப்பிடும் வீரன் பொருட்டும் நடந்ததை நாம் அறியலாம். கல்லில் இவ் வீரனது பேரும் பீடும் எழுதப்பட்டன. அதற்குச் செம்மலர் மாலையும் மயிற் பீலியும் சூட்டப் பட்டன. இவ்வாறெல்லாம் இவ்வீரனுக்கு நடுகல் அமைக்கப்பட்டது என்பதைப் புலவர்,

> ' செம்பூங் கண்ணியொடு,
> அணிமயிற் பீலி சூட்டிப் பெயர்பொறித்து
> இனிநட் டனரே கல்லும் '

என்று தெரிவித்துள்ளார்.

இவ்வாறு நடுகல் நடப்பெறும் நிலைக்கு இவ் வீரமகன் தன் வீரத்தில் சிறந்து விளங்கினுன் என்பதும், இப்புலவர் பெருமானுர் இவ்வீரனைப் பற்றிக் குறிப்பிடும் குறிப்பால் அறிந்துகொள்ள லாம். இவ்வீரன் எதிரிகள் கொண்டு சென்ற பசுக்களையும் கன்றுகளையும் மீட்டு வந்தனன் என்ற வீரமேம்பாட்டினைக் " கன்ரூெடு, கறவை தந்து பகைவர் ஓட்டிய நெடுந்தகை " என்று பாடியுள்ளார்.

இத்தகைய வீரன் இறந்தனன். " இவன் இறப்பை இவன் உயிருடன் இருக்கும் காலத்தில் உதவி பெற்றுச் சென்ற பாணரும் அவர்கள் சுற்றத்தாரும் அறியார். ஆதலால், அவன் இறந்த இந்த நாளும் வருவரோ ? " (அவர்கள்

வந்தால் மனமுடைந்து போவார்கள்)" என்ற குறிப்பில்,

**நெடுந்தகை கழிந்தமை அறியாது**
**இன்றும் வருங்கொல் பாணரது கடும்பே!'**

என்று பாடித் தம் கையறு நிலைத்துறையைச் சார்ந்த கவியினை முடித்துள்ளார் புலவர் பெருமானர்.

# 9. தண்காற்பூட்கொல்லனர்

தண்காற்பூட்கொல்லனர் என்பவர் ஊர்ப் பெயராலும், தாம் மேற்கொண்ட தொழிற் காரணத்தாலும் பெயர் பெற்ற புலவர். தண் கால் என்பது ஓர் ஊரின் பெயர். இவ்வூர் பாண்டி நாட்டில் உள்ளதாகும். இவ்வூர் திருமால் திருக்கோயிலைக் கொண்ட சிறப்புடையது. இத் தலத்தைத் திருமங்கையாழ்வாரும் பூதத்தாழ் வாரும் பாடியுள்ளனர். அப்பாடல்கள் நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில் உள்ளன. இவ்வூர் பாண்டி நாட்டுச் சாத்தூருக்கு மேற்கே பதின் மூன்று கல் தொலைவில் உள்ளது. இத்தலத்துப் பெருமாள் **தண்காலப்பன்** என்றும், பெரு மாட்டி **அன்ன நாயகி** என்றும் வழங்கப்படுவர். இங்குத் திருக்கோயில் கொண்டுள்ள திருமால் கிழக்கு நோக்கி, நின்ற திருக்கோலத்துடன் அன்பர்கட்குக் காட்சி அளித்து வருகிறார். இப் பெருமாள் கோவில் குளம், **பாப விநாச தீர்த்தம்** என்னும் பெயருடையது. இப்புலவர் இத் தகைய அருமை பெருமை வாய்ந்த ஊரினர் ஆதலின், **தண்காற்பூட்**கொல்லனர் என்று வழங் கப்பட்டனர்.

கொல்லர் என்னும் சொல் இருவகைத் தொழி லாளர் இனத்திற்கு இடப்பட்டு வரும் பெயராகும்.

இரும்பு வேலை செய்யும் இனத்தாரைக் கருங் கொல்லர் என்பர். இவர்களே இது போது கரு மார் என்றும் குறிக்கப்பட்டு வருபவர். தட்டா ரும் பொற்கொல்லர் என்று கூறப்படுவர். இவர் கள் பொன்னைக்கொண்டு பொற்புறு பணிகளைச் செய்து தருவதால் இவ்வாறு கூறப்பட்டு வரு கின்றனர்கள். எனவே, இங்குக் குறிப்பிடப்படும் புலவர் பூண் கொல்லர் என்பார், ஆபரணங்களைச் செய்யும் தட்டார் இனத்தவர் என்பதை இவர் பெயர்க்கு முன் உள்ள பூண் என்னும் சொல் புலப்படுத்தி நிற்கிறது. பூணுவது ஆபரணம். எனவே, இவர் தண்கால் என்னும் ஊரைச் சேர்ந்த பொன் அணிகளைச் செய்து வந்த புலவர் என்பது அறியப்படுகிறது.

இவர் புலவர் என்பதைப் புறநானூற்றில் உள்ள இவரது பாடலால் அறிந்துகொள்ள லாம். இவர் பாடியுள்ள பாடல் ஒன்றே, அப்பாடல் இல்லறத்தின் மாண்பை இனிதின் எடுத்துக் கூறும் பாடலாகும். மக்கள் மேற் கொள்ள வேண்டிய இருபேரறங்களாகிய இல் லறம் துறவறம் என்பவற்றுள் இல்லறத்தின் சிறப்பு இப்புலவரால் எடுத்து இயம்பப்படுகிறது எனில், இவர் இல்லறத்தில் நன்கு ஈடுபட்ட இன் மொழிப் புலவர் என்றும் கூறலாம் அன்றோ?

இப்புலவர் பெருமான் பாடியுள்ள புறநானூற் றுப் பாடலால் இவர் யாருடைய இல்லறத்தைச் சிறப்பிக்கிறார் என்பதை நாம் வெளிப்படையாக

அறிந்துகொள்ள இயலவில்லை. ஆனால், இவர் பாட்டு நல்ல முறையில் இல்லறம் என்னும் நல்லறத்தை நடத்திய நல்லான் ஒருவனைப் பற்றிப் பாடப்பட்டது என்பது மட்டும் புலப்படுகிறது. இப்புலவர் சுட்டிக்காட்டும் இல்லறத்தான் ஒரு சிறந்த வீரனாய் இருக்க வேண்டும். அவ்வீரன் போர் முகத்துப் புறமுதுகு இடாமல் எதிர்த்து நின்று வெற்றி காணும் வீரன் என்பதும் விளங்குகிறது. அவன் வெற்றி வீரனாய்த் திகழ்ந்த காரணத்தால் அவன் தலைவன் அவனுக்கு யானைப் பரிசில் தந்து பாராட்டியிருக்கிறான் என்பதையும் நாம் அறிந்துகொள்ளலாம். அவ்வீரன் பரிசாகப் பெற்ற யானை பெருமை மிக்கதாய்த் தன் நெற்றியில் பொன்னால் ஆன பட்டம் அணியப்பட்டதாய் இருந்தது என்பதும் நாம் அறிதல் வேண்டும். இத்தனைக் குறிப்புக்களையும் புலவர், தாம் பாடியுள்ள பாட்டில் விதந்து கூறியுள்ளார்.

இப்புலவர் கூறும் வீர மகனுக்கு வாய்த்த வாழ்க்கைத் துணைவி நல்ல பண்பாடு உடையவளாய்க் காணப்பட்டாள். மாசிலாக்குலத்து வந்தவளாய், வருவிருந்து உவப்ப ஊட்டும் நேசம் மிக உடையவளாய், கொழுநன் நினைப்பு அறிந்து ஒழுகும் நீர்மையளாய், பெற்றதே கொண்டு உவப்பவளாய்க் காணப்பட்டாள்; அவள் தன் இல்லம் நாடிவந்த இரவலர்க்கும் ஏனையோர்க்கும் தயிருடன் கலந்த கூழையும், நல்ல உணவையும் உண்ணக் கொடுப்பவளாய் விளங்கினாள். அவள்

கொடுத்த உணவு புதிய உணவாய் இருந்தது. அவள் பழைய உணவை ஈபவள் அல்லள்; இவ்வாறு வந்த விருந்தினரை வரவேற்று உபசரித்து அனுப்பியதோடு, இனி வரும் விருந்தினர் யாவர் என்றும் எதிர்நோக்கி இருந்தவள். அவள் இன்னோரன்ன பண்புடையவள் என்பதைத்தான் தண்காற்பூட்கொல்லனார்,

> " மிதவை
> யாணர் நல்லவை பாணரொடு ஒராங்கு
> வருவிருந்து அயரும் விருப்பினள் "

என்று சிறப்பித்துப் பாடினர். இதன் பொருள், "கூழையும், புதிய நல் உணவையும் பாணருடன் மற்றவர்க்கும் ஒரே வகையவாகக் கொடுத்து உதவி, இனி வரும் விருந்தினர் யாவர் என்று எதிர் நோக்கி வந்தபோது விருந்து செய்யும் விருப்பினள்" என்பதாம். மிதவையாவது, கூழ் உணவாகும். இத்தகைய தம்பதிகள் தங்கள் வாழ்நாளின் இறுதியில் வானோர்க்கு நல் விருந்தினர்கள் ஆவார்கள் அல்லரோ? இவர்களைப் போன்ற தம்பதிகளின் செயல்களைத் தம் மனத்தில் கொண்டன்றோ வள்ளுவனார்,

> "செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
> நல்விருந்து வானத் தவர்க்கு."

என்று கூறியுள்ளார்?

இவ்வீர மகனும், இவன் இல்லக் கிழத்தியும் வாழ்ந்த இடம் நல்ல காவல் இடமாகவே

இருந்தது என்பதை "அருமிளை இருக்கை யதுவே" என்று இப்புலவர் கூறுவதால் தெரிந்து கொள்ளலாம். இப்புலவர் கூறும் உவமை அழகுடைய உவமையாகும். இவர் சேவலின் நெற்றிக்கு முண்முருங்கைப் பூவை உவமை காட்டுகிருர். "கவிர்ப்பூ நெற்றிச்சேவல்" என்ற அடியினைக்காண்க. கவிர் என்பது முண்முருங்கையாகும்.

இப்புலவர் பாடிய பாட்டில் ஒரு காட்சியும் காணப்படுகிறது. அக்காட்சி பூனையும் பெட்டைக் கோழியும் அளிக்கும் காட்சியாகும். பூனை பெட்டைக் கோழியைப் பிடித்துத் தின்னப் பார்த்து, மெல்ல நடத்தலைப் பெட்டைக்கோழி கண்டு நடுங்கிப் பயந்து கூக்குரல் இடும் என்று இவர் தம் சொற்சித்திரத்தில் தீட்டியிருப்பது நாம் படித்து இன்புறுதற்குரிய பகுதியாகும். அதுவே,

> **" ஊர்முது வேலிப் பார்நடை வெருகின்**
> **இருள்பகை வெரீஇய நாகுஇளம் பேடை**
> **உயிர்நடுக்கு உற்றுப் புலாவிட்டு அரற்ற"**

என்பது. இதன் பொருள், "ஊரின் பழைய வேலியைச் சார்ந்துள்ள, தான் கவர்ந்துகொள்ளுதற்குரிய கோழி முதலியவற்றைப் பார்த்து மெல்ல நடத்தலையுடைய காட்டுப் பூனையாகிய பகைக்கு அஞ்சிய இளைய பெட்டைக்கோழி, தன் உயிரின்மீது வைத்த விருப்பத்தால் நடுக்குற்றுத் தான் உண்ணத் தன் வாயில் வைத்திருந்த தசையையும் கீழே போட்டுக் கத்த" என்பதாம்.

இவ்வொரு பாடலில் காட்டுப் பூனையின் நடையையும், கோழியின் அச்சத்தையும், எத்துணை அழகாக இப்புலவர் பாடியுள்ளார் பார்த்தீர்களா!

# 10. மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்

இளவேட்டனார் ஒரு புலவர். இவர் தொழில் வாணிகம். அவ்வாணிகம் துணிகளை விற்கும் வாணிகம் ஆகும். இவர் துணி வணிகர் என்பதை **அறுவை வாணிகன்** என்று இவரது பெயர்க்கு முன் கொடுக்கப்பட்டுள்ள அடைமொழிகளால் அறிந்துகொள்ளலாம். அறுவை என்பது ஆடையாகும். இத்தொழிலை இவர் மதுரையம்பதியில் நடத்தினர். இதனை, **மதுரை** அறுவை வாணிகன் இளவேட்டனார் என்று ஊர்ப் பெயரையும் சார்த்தி இவர் பெயர் வழங்கப்படுவதால் அறிந்துகொள்ளலாம். இவரது இயற்பெயர், இளவேட்டனார் என்பது நம் நினைவில் இருத்தல் வேண்டும். இளமையில் இவர் வீறுடன் இருந்தார் போலும்! இவர் ஒருபுலவர் என்பதற்கு இவர் பாடிய பாடல்கள் சான்று தருகின்றன. இவர் பாடல்கள் அகநானூற்றிலும், குறுந்தொகையிலும், நற்றிணையிலும், புறநானூற்றிலும், திருவள்ளுவ மாலையிலும் காணப்படுகின்றன. இவரது பாடல் திருவள்ளுவமாலையில் காணப்படுவதால், இவர் திருக்குறளினிடத்திலும், அதன் ஆசிரியரிடத்திலும் பெருமதிப்புக் கொண்டிருந்தனர் என்பது நன்கு

தெரியவருகிறது. இவர் திருக்குறளை **வாயுறை வாழ்த்து** என்று வாயாரப் புகழ்கிருர். வாயுறை வாழ்த்தாவது மக்கள் நல்வழிப்படுதற்குக் கூறப்படும் உறுதி மொழிகள் அடங்கிய வாழ்த் தாகும். இவர், "வள்ளுவனர் எல்லா மக்களும் மனம் மகிழ்ந்து ஏற்றுக்கொள்ளும் வகையில், திருக்குறளை உரைத்தார்," என்று மொழிகிருர்.

புறநானூற்றில் இவர் பாடியுள்ள பாடல் யார் மீது பாடப்பட்டது என்பது தெரிந்திலது. ஆனல், இவர் பாடியுள்ள செய்யுளின் ஈற்றடி, "உரைசால் நெடுந்தகை ஓம்பும் ஊரே" என்று முடிதலின், இதுவும் ஒருவன்மீது பாடப்பட் டிருக்க வேண்டும் என்பதை அறியலாம். அவ் வொருவன் பெயர் குறிப்பிடப் பெருமல் **நெடுந் தகை** என்று மட்டும் குறிப்பிடப்பட்டிருக்கின் றது. அந்நெடுந்தகை நல்ல வள்ளன்மைக் குண முடையவன் என்பது இரவலர்க்கு இல்லை என் ஞது குறைவுபடாது ஈந்தவன் என்று கூறப்பட் டிருப்பதிலிருந்து உணர்ந்துகொள்ளலாம். இப் படிக் குறைவு இல்லாது ஈந்த கோமகனய் அந் நெடுந்தகை இருந்தமையால்தான், புலவர் பாடும் புகழினைப் பெற்று விளங்கி நின்ருன். இதனல் தான் **உரைசால்** நெடுந்தகை என்று உரைக்கப் பட்டான்.

அந்நெடுந்தகை ஓர் ஊருக்குத் தலைவனகவும் இருந்திருக்கிருன். அதனை அவன் கண்ணும் கருத்துமாகக் காத்து வந்திருக்கிருன். அவ்வூர்

பல சிற்றூர்களையும், அச்சிற்றூர்களுக்கேற்ற குடி மக்களையும் கொண்டது. அச்சிற்றூரில் வாழ்பவர் தம்கடமையினை மறவாதவர்; போரில் புறமுதுகு காட்டி ஓடாது, பகைவரை எதிர்த்து நின்று போரிட்டுப் பூத உடல் நீத்துப் புகழ் உடல் பெற்ற வீரர்கட்கு நடுகல் நட்டு வழிபாடியற்றிய வண்குடி மக்கள் ஆவார்கள்.

நடுகல்லாவது, போரில் இறந்தவரின் பீடும் பேரும் எழுதிய கல். அதனை அவர்கள் இறந்த இடத்தில் நட்டு, அதனை வழிபடுவார்கள். இதுவே 'கல்லெடுப்பு' என்று இக்காலத்தில் கூறப்படுவது. இதற்குத் தினமும் பூசனை புரிதலும் உண்டு. அன்றி, ஆண்டுக்கொரு முறையேனும் பூசனை ஆற்றுதல் உண்டு. இப்பூசனையை ஆற்றும் முறையாவது, இக்கல்லினை நீராட்டியும், நெய் விளக்கு ஏற்றியும், தூபம் காட்டியும் வழிபடுவதாகும். இக்கல்லின் முன், இக்கல்லில் எழுதப்பட்டவனுக்கு விருப்பமாய் இருந்த பொருள்களை வைத்துப் படைப்பர். இக்கல்லுக்குக் காட்டப்படும் தூபத்தின் புகை மேகம் போலப் பரந்து செல்லும் என்றால், தூபப் புகையின் மிகுதிப்பாட்டை நாம் எடுத்துக் கூற வேண்டா அன்றோ? அப்புகை வெறும்புகையன்றி, நல்ல மணமுடைய புகையாய் இருக்கும். இன்னம் விரிவாக இந்நடுகல் விழாச் சிறப்பினை உறையூர் இளம்பொன் வாணிகனார் வரலாற்றிலும் கண்டுகொள்க. கற்பூர ஒளி அக்காலத்தில் காட்டப்படவில்லை என்பதை ஈண்டு நினைவுபடுத்

திக்கொள்க. "சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்" என்ற அப்பர் பெருமானுடைய அருள் வாக்கும் இதற்குச் சான்று பகரும். இவ்வாறு வீர வழிபாட்டில் தலை சிறந்த ஊர் இங்குக் குறிப்பிடப்பட்ட நெடுந்தகை ஓம்பிய ஊர் ஆதலின், இதனைப் புலவர் மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்,

> **"நன்னீர் ஆட்டி நெய்ந்நறைக் கொளீஇய**
> **மங்குல் மாப்புகை மறுகுடன் கமழும்**
> **அருமுனை இருக்கைத்து"**

என்று கூறினார். "முனை இருக்கைத்து" என்பது, முதன்மையான இருக்கையுடையது என்பதாம்.

இத்தகைய முதன்மை மிக்க ஊரைப் பகைவர் அணுகுதல் அரிது என்பதைப் புலவர் ஓர் உவமை வாயிலாக உரைத்திருப்பது நனிமிகு சுவை தரும் பகுதியாகும். இவ்வூர் பாம்பு வாழும் புற்றுப் போன்றது என்ற உவமையால் சிறப்பிக்கப்பட்டது. "அரவு உறை புற்றத்து அற்றே" என்பது இவ்வுவமையை உணர்த்தும் அடி. இந்த உவமையின் உட்பொருள் யாது? பாம்பு உறையும் புற்றின் அருகே எவரேனும் போவரோ? அணுகுவரோ? அணுகினால் என்னாவர்? அழிவே உறுவர் அன்றோ? அதுபோலப் பாம்பு போன்ற நெடுந்தகையினால் காக்கப்படும் புற்றுப்போன்ற

ஊரானது பகைவர்களால் அணுகுதற்கு அருமைப்பாடு உடையதாகும். அப்படி அணுகுவார் பாம்பு புற்றருகே சென்றவர் படும் பாடு படுவர் என்பதாம். இக்கருத்தினை இச்சிறு உவமையில் அமைத்துப் பேசிய புலவர், ஒரு மாபெரும்புலவர் அல்லரோ ?

# 11. பக்குடுக்கை நன்கணியார்

பக்குடுக்கை நன்கணியார் என்பவர் புலவரும் சிறந்த வான சாத்திரியாரும் ஆவர். இவர் புலவர் என்பதை இவர் பாடிய புறநானூற்றுப் பாடலிற்காணப்படும் செய்யுள் அறிவிக்கும். இவர் சோதிடப் புலமையுடையார் என்பதை இவர் பெயராகிய 'கணியார்' என்பது உணர்த்தும். கணி என்னும் சொல், சோதிடம் வல்லான் என்ற பொருளைத் தரும். அச்சோதிடக் கலையில் இவர் சிறந்திருந்தமையின், அச்சிறப்புப் பற்றிக் கணியார் என்றே வழங்கப்பட்டனர். சோதிடக் கலையில் சிறந்து விளங்கின காரணத்தால் இவர் கணியார் என்று மட்டும் வழங்கப்படாமல் நன்கணியார் என்று அடைமொழி புணர்த்தும் வழங்கப்பட்டுள்ளார்.

இவர் நன்கணியார் என்று மட்டும் குறிக்கப் பெருமல், **பக்குடுக்கை** என்ற அடைமொழியும் இணைக்கப்பட்டுப் 'பக்குடுக்கை நன்கணியார்' என்றும் வழங்கப்பட்டு வந்துள்ளார். 'பக்கு' என்னும் மொழிக்குப் 'பை' என்பது பொருள். இச்சொல்லுக்கு இப்பொருள் **ஐங்குறு நூறு** என்னும் நூலிலும் கலித்தொகையிலும் ஆளப்பட்டுள்ளது. உடுக்கை என்பது உடையாகும். 'பக்கு' என்பது மரப்பட்டைக்கும் பெயர். ஆகவே, நன்கணியாராகிய இப்புலவர் மரவுரியா

லாகிய மெய்ப்பையையே — சட்டையையே — உடையாக உடுத்து வாழ்ந்திருக்கின்றார் என்பது புலனாகும். இதனால் இவரது வறுமையும் வெளிப்படுகின்றது. இவர் தமக்கு நல்லுடை வேண்டும் என்ற அவா இல்லாது, தம் ஆகத்தை மறைப்பதற்கு ஏதோ ஒரு பொருள் இருத்தல் போதுமானது என்று கருதிய சீரிய கருத்தர் ஆவர். இதைக்கொண்டு இவர் உலக இன்பத்தில் மிகுந்த கருத்தைச் செலுத்தாத ஞானியார் என்றுங்கூடக் கூறலாம். இக்காலத்திலும் துறவியர் சிலர் நூலாடையேயன்றித் தோலாடையும் உடுத்தித் திரிவதைக் காணலாம்.

இப்புலவருடைய புறத்தோற்றத்தைக் கொண்டு இவர் ஞானியாராகத்தான் இருக்க வேண்டும் என்று கூறலாம். இவர் பாடியுள்ள பாடலாலும், இவர் சிறந்த ஞானியார் என்பது புலப்படுகிறது. "அப்பாட்டு யாது? அப்பாட்டால் கருதப்படும் ஞானக்கருத்துக்கள் யாவை?" என்பனவற்றை இனிக் காண்போமாக:

பக்குடுக்கை நன்கணியார் பாடிய பாடல் ஞானக்கருத்தை நன்முறையில் அறிவித்துள்ளது. அப்பாடலை நன்கு சிந்தித்து உணர்ந்தால், உலக வாழ்வின் தன்மை இத்தகைத்து என்பது தெற்றத் தெளியப் புலனாகும். இவரது கருத்து, இவ்வுலகத்தியற்கை மிகக் கொடிது என்பது. இவர் இவ்வாறு உலக இயற்கை கொடிது என்று கூறுவதற்குக் காரணமும் காட்டுகிறார். "உலக

மக்களே, நான் கூறுவதை உற்றுக் கவனி யுங்கள்,'' என்று இரந்து அழைத்து நல்லுரை வழங்குவது போல, இவர் உலகில் நிகழும் நிகழ்ச்சியினை எடுத்து மொழிகிறார். அந்தோ! ஒரே வீதியில் ஒரு வீட்டின் முன்னர் அவ்வீட் டிற்குரியவன் இறந்து போனமையைக் குறித் துச் சாப்பறை அறையப்படுகின்றது; மற் றோர் இல்லத்தில் மங்கள வாத்தியமாகிய முழ வின் ஓசை அவ்வகத்தில் நடக்கும் திருமணம் காரணமாக ஒலிக்கப்படுகிறது. மற்றொரு நிகழ்ச்சியினையும் பாருங்கள்: ஓர் இல்லத்தில் காதலனோடு கூடி மகிழ்ந்த காதலி தன் கூந்தலில் மலர் அணிந்து மனம் மிகக் களிக்கின்றாள். மற் றோர் அகத்தில் ஓர் இளைய நங்கை தன் கணவ னோடு கூடி மகிழும் மகிழ்ச்சி நீடிக்கப் பெறாமல், அவன் இறந்தமைக்கு மிக மிக நொந்து கண்ணீர் சிந்திக் கலங்கியவளாய்க் காணப்படுகின்றாள். இவ்வாறெல்லாம் உலக மக்கள் இன்ப துன்பங் களைத் துய்க்கும் வண்ணம் அந்தப் பிரமனே படைத்துள்ளான். அவன் ஏன் இப்படிப் படைக்க வேண்டும்? அவன் நிச்சயமாகப் பண்பு இல்லாதவனே,'' என்று கூறி உலக இயற்கையினை விளக்குகின்றார் இப்புலவர். உல கின் இயற்கை கொடிது என்று கூறாமல் வேறு என்ன கூறுவார்? இவ்வாறு உலக இயற்கை யினை உயர்ந்த கருத்துக்கள் தோன்ற உரைப் பதிலிருந்து இவர் சிறந்த ஞானியார் என்பது ஐயம் இன்றிப் பெறப்படுகின்றதன்றோ? ஞானி

களுக்கன்றோ இவ்வாறு உயர்ந்த கருத்துக்களை எடுத்துக் கூறும் ஆற்றல் உள்ளது?

இவ்வாறு உலகில் ஒருபால் மகிழ்வும், மற்றொருபால் துன்பமும் நிறைந்திருக்கும் நிலையினை மட்டும் கூறி இப்புலவர் நிறுத்தினரல்லர். இதற்குமேல் நல்லுபதேச மொழியினையும் உரைத்துள்ளார். அதுவே திருமூலர் கருத்தாகிய "யாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறுக," என்னும் உயர்ந்த கருத்தை இவர் பெற்றிருந்தமையைக் காட்டுவதாகும். இவர் கூறும் அறவுரையாவது, "நான் உலகத்தின் தன்மையினை இன்னது என்று கூறிவிட்டேன். ஆகவே, இதனை நன்கு உணர்ந்தவர் வீட்டின்பத்தைத் தரும் நல்ல செயல்களை அறிந்து ஆற்றிக்கொள்வாராக," என்பதாம். இத்துணைக் கருத்துக்களையும் இப்புலவர் பெருமானுர் தாம் பாடிய ஒரு பாட்டில் அடக்கிப் பாடியுள்ளார். அப்பாடல் பல அடிகளையுடைய பாடலும் அன்று; சில அடிகளைக்கொண்ட பாடலே ஆகும். அப்பாடல் முழுமையினையும் உணர்ந்துகொள்ளுதல் பெருநலம் பயக்கும். அப்பாடல் நாம் வீட்டின்பம் பெறுதற்கான செயல்களில் ஈடுபடத் துணை செய்ய வல்லது என்பது, நுணுகி அறிவார்க்குப் புலப்படும். அப்பாடல்,

**" ஓர்இல் நெய்தல் கறங்க ஓர்இல்**
**ஈர்ந்தண் முழவின் பாணி ததும்பப்**
**புணர்ந்தோர் பூவணி அணியப் பிரிந்தோர்**
**பைதல் உண்கண் பனிவார்பு உறைப்பப்**

**படைத்தோன் மன்றஅப் பண்பில் ஆளன் ;**
**இன்னாது அம்மஇவ் உலகம் !**
**இனிய காண்கஇதன் இயல்புஉணர்ந் தோரே."**

என்பது, அதாவது, "ஒரு வீட்டில் சாப்பறை ஒலிக்க, மற்றொரு வீட்டில் குளிர்ந்த மத்தளத்தின் இசை இசைக்க, கணவனோடு கலந்து இன்புற்றவள் மலர் அணி அணிந்து மகிழ, ஒருத்தி தன் கணவனை இழந்து வருத்தம் அடைந்து கண்ணீர் சிந்த, இவ்வாறு ஒன்றற்கு ஒன்று நேர் மாறான விதத்தில் அந்தப் பிரமன் உலக மக்களைப் படைத்துள்ளான். ஆகவே, அவன் உண்மையில் பண்பு இல்லாதவன் ஆவான். எனவே, இந்த உலகம் துன்பம் தருவதாகும். இனிய மோட்ச உலகம் அடைய விரும்பினோர் நல்ல செயல்களைச் செய்வாராக," என்பதாம்.

இத்தகைய அறவுரைகளை அறிவுறுத்திய பக்குடுக்கை நன்கணியார் மற்றும் பல பாடல்களைப் பாடியிருப்பாராயின், பல அரிய கருத்துக்களை நாம் அறியலாம் அன்றோ? என்றாலும், இவ்வொரு பாட்டின் உறுபொருளையேனும் உணர்ந்து நாம் நல்வழிப்படுவோமாக.

# 12. நெடும்பல்லியத்தனர்

பல்லியத்தனர் என்பவர் பண்டைக்காலத்துச் செந்தமிழ்ப் புலவருள் ஒருவர். இவரது இயற் பெயர் யாது என்பதை நாம் அறிதற்கு இல்லை. இயம் என்னும் சொல், வாத்தியம் என்னும் பொருள் தருதலின், இவர்பல வாத்தியங்களைத் தம்மிடத்தில் கொண்டிருந்த காரணத்தால் பல்லி யத்தனர் என்று வழங்கப்பட்டிருக்கின்றனர். இவர்பால் பல வாத்தியங்கள் இருந்தன என்று கருதுவோமாஞல், இவர் அவ்வாத்தியங்களை இயக்க வல்ல ஆற்றல் படைத்தவராயும் இருக்க வேண்டும் ; அல்லது அவ்வாத்தியங்களை வேண் டுவார்க்கு விலைப்படுத்தி வந்தவராய் இருக்க வேண்டும். இவ்விரண்டு காரணங்களாலும் இவர் வாத்தியங்களால் வாழ்வு நடத்தியவர் என்பதை ஒருவாறு துணிந்து உரைக்கலாம். இவரது உடல் வளர்ச்சி நீண்டிருந்தமையின், நெடும்பல்லியத் தனர் என்று வழங்கப்பட்டார் என்பதையும் நினைவில் கொள்வோமாக. இவ்வாறு வாத்தி யங் காரணமாகப் பெயரைப்பெற்ற இவர், புல வராகவும் இருந்திருக்கின்றுர். இவர் பாடியுள்ள ஒரு பாடல் புறநானூற்றில் காணப்படுகிறது. அப்பாடல் **பாண்டியன் பல்யாக சாலை முதுகுடு மிப்பெருவழுதியின்** சிறப்பைக் குறிப்பிடும் முறையில் **விறலியாற்றுப்படை** என்னும் துறை

யில் அமைந்ததாகும். ஆற்றுப்படை என்பது, பரிசில் பெற்ற ஒருவன், பரிசில் பெற விரும்பிய மற்றொருவனுக்குத் தான் யாரிடமிருந்து பரிசில் பெற்று வந்தானோ, அவருடைய அருமை பெருமைகளைக் கூறிக் கொடைச் சிறப்பையும் எடுத்துப் பேசி, "இவ்வழியே சென்றால் அவ்வள்ளலைக் காணலாம்" என்று ஆற்றுப்படுத்துவதாம்; அதாவது. வழிப்படுத்துவதாம். விறலியாற்றுப்படை என்பது அரசனுடைய கீர்த்தியைப்பாடும் பாடினியை வழிப்படுத்துவதாகும்.

நெடும்பல்லியத்தனார் விறலியைப் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின்பால் ஆற்றுப்படுத்தியுள்ளார். இப்பாண்டியன் இப்புலவரால் மட்டும் பாடப்பட்ட பெருமை சான்றவன் அல்லன். இவனைக் **காரிகிழார்**, **நெட்டிமையார்** ஆகிய இரு பெரும்புலவரும் பாடிச் சிறப்பித்துள்ளனர். இவ்வாறு இவன் புலவர் பலரால் பாடப்படும் பெருமை பெற்றவன் என்றால், இவன்பால் பல அரிய குணங்கள் இருக்கவேண்டும் அல்லவா? அத்தகைய பெருமைகள் என்ன என்பதையும் நாம் இங்கு ஆராய்தல் இன்றியமையாததாகும்.

இப்பாண்டியன் தெய்வபத்தியுடையவன்; சிவபெருமானிடத்தில் நிரம்பிய அன்புடையவன். "இவனது சென்னி முக்கட்பரமன் திருக்கோயில் வலம் வரும் காலத்துத் தாழ்வதாக," என்று புலவர் **காரிகிழார்** கூறுவதிலிருந்து,

இவன் பிறர் இடத்து எங்கும் தன் தலையினைத் தாழச் செய்யாதவன் என்பது தெரிகிறது. இவன் ஈகையிலும் சிறந்தவன். புலவர் இவனைத் "தண்டா ஈகைத் தகைமாண் குடுமி" என்றும் கூறியுள்ளார். அதாவது, "குறையாத கொடைக் குணம் வாய்ந்த தகுதியும் மாட்சிமையுமுடைய முதுகுடுமிப் பெருவழுதி" என்பதாம். இப் பாண்டியன் தன்னைப் பாடி வரும் பாணர்கட்குப் பொற்றாமரை மலரை ஈபவன்; பகைவர்க்கு இன்னாதவற்றைச் செய்து, பரிசிலருக்கு இனியவற்றைச் செய்பவன் ஆவன். இப்பல்யாகசாலை முதுகுடுமி பகைவர் தேயத்தைப் பாழ்படுத்திய செய்தி மிகவும் பரிபவப்படத்தக்க செய்தியாகும். இவன் பகைவருடைய அரண்களைக் கழுதை ஏர் பூட்டி உழுதனன். அவர்களது தேயத்தின்கண் விளைநிலங்களில் குதிரை பூட்டப்பட்ட தேரை ஓட்டிப் பாழ்படுத்தினன்; பகைவர் குளித்து இன்புறும் குளங்களின் நீர் பாழாகும்படி யானைகளைப் படியச் செய்தனன். இப் பாண்டியன் பல யாகங்களையும் செய்தவன்; இதனலேதான் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்று கூறப்பட்டனன்.

இன்னோரன்ன சிறப்புடையவனை நெடும்பல்லியத்தனார் எவ்வாறு சிறப்பித்துள்ளார் என்பதை இனிக் காண்போமாக. இவர் இப்பாண்டியனைக் கண்டுவரச் செல்கிறார். இப்பாண்டியன் போர்க் கோலம் பூண்டு பகைவர் தேயத்தில் பாசறை அமைத்து அங்குத் தங்கியிருக்கின்றான். அவ்

விடத்திற்கு விறலியையும் தம்முடன் வருமாறு அழைக்கின்றார் புலவர். அப்படி அழைக்கின்ற போது,

> "நல்யாழ் ஆகுளி பதலையொடு சுருங்கிச்
> செல்லா மோதில் சில்வளை விறலி !"

என்று கூறி அழைக்கின்றார். இதன் பொருள், "நல்ல யாழையும் சிறு பறையையும் ஒரு தலை மாக்கிணையையும் கட்டிக்கொண்டு போவோம். அல்லோமோ? சொல்வாயாக," என்பது. இவ்வாறு கூறியதன் குறிப்புப் "பாண்டியனைக் கண்டு பரிசில் பெற்று வரலாம். வருக," என்பதாம். இதனால், இப்பாண்டியன் தன் நாட்டகத்து இருந்தபோதும், தன்னை அடைந்து கேட்பவர்க்கு இல்லை என்னாது ஈந்து வந்த வள்ளல் என்பதைப் புலவர் அழகுற அறிவித்துள்ளார். பரிசில் பெறப் போதல் வேண்டும் என்னும் குறிப்புடன், நெடும்பல்லியத்தனார் விறலியை அழைத்தார் என்றே இவ்வடியினை மேற்கோளாகத் தொல்காப்பியப் பொருளதிகார உரையாசிரியர் நச்சினார்க்கினியரும் குறிப்பிட்டுள்ளார். நெடும்பல்லியத்தனார் தாம் பல வாத்தியங்களை வைத்து அனுபவம் பெற்றவர் என்பதற்கு அறிகுறியாக இவரது பாடலாகிய இப்பாடலில், யாழ், பறை, மாக்கிணை ஆகிய வாத்தியங்கள் எடுத்துக் கூறியிருப்பதைக் கண்டுகொள்ளலாம். இவ்வாத்தியங்களை நன்முறையில் இயக்க வல்லவர் விறலியராகிய பாடினிமார் என்பதையும் நாம் உணரலாம்.

இப்புலவர் பெருமானுர் பாடலால் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி சோம்பி வாளா தன் அரண்மனையிலே இருந்துவிடாமல், போர் என்ன வீங்கும் பொலங்கொள் தோளினனுய், பகைவர் தேயத்தில் சென்று போர்புரியும் வேட்கையினனுய் ஆண்டே பாசறையின்கண் விளங்குபவனுய் இருந்தான் என்பன போன்ற குறிப்புக்கள் அறியக் கிடக்கின்றன. இவன் இவ்வாறு பகைவர் புலத்தில் இருந்த நிலையினைப் புலவர் எவ்வளவு குதூகலமாகக் கூறுகின்ருர் பாருங்கள் !

> "பகைப்புலம் மரீஇய தகைப்பெருஞ் சிறப்பின்
> குடுமிக் கோமான் "

என்பதே அவ்வடிகள்.

இப்பாண்டியன் இருந்த பாசறை பரந்த பாசறை. " கண் அகல் பறந்தலை" என்று அன்ருே புலவர் குறிப்பிடுகிருர்? இவ்வாறெல்லாம் இவ்வரசன் இருந்த இடத்தைக் கூறி விறலியை அழைத்த போது, அவள் இவருடன் போகாமலா இருந்திருப்பாள்? கட்டாயம் போயிருப்பாள் : பரிசிலும் பெற்று மீண்டிருப்பாள்.

# 13. மதுரை ஓலைக்கடைக் கண்ணம்புகுந்தாராயத்தனர்

மதுரையின் சிறப்புக் குறித்து முன்னர்ப் படித்தோம் அல்லவா? அதுதான் மதுரைக்குரிய சிறப்பு என்று சொல்ல முடியாது. மதுரையின் மாண்பு சொல்லச் சொல்ல மாளாதது. மதுரையைப் பற்றிப் பரிபாடல் நூலில் காணப்பட்ட சில செய்யுள்களின் துணைகொண்டு முன்னர் மதுரையின் பெருமையினை உணர்ந்தனம். அதே பரிபாடலில் மதுரையைப்பற்றிக் கூறும் ஒரு பாடற்கருத்து, மேலும் மதுரையின் மாட்சிமையினை மட்டின்றி விளக்கி நிற்கின்றது. அப்பாட்டின்பொருளை நாம் அறிந்த பின்பே "மதுரைமா நகரம் இவ்வளவு சிறப்புடையதா!" என்று வியந்து பாராட்டுவோம். அப்பாட்டின் திரண்ட பொருள் பின் வருவதாகும்.

மதுரைமா நகரம் திருமாலின் உந்தியங்கமலத்திலிருந்து தோன்றிய தாமரை மலர்க்கு ஒப்பானது. உந்தியந்தாமரைக்குப் பல இதழ்கள் இருப்பது போல, மதுரையாகிய கமலத்திற்கு இதழ்கள் போலப் பல தெருக்கள் நிறைந்துள்ளன. பங்கய மலரின் இடையே ஒரு கொட்டை இருப்பது போல, மதுரையாகிய வனசத்தின் இடையே, மதிமுடிச் சொக்கன் கோயில் தாம

ரைப் பொகுட்டென விளங்கிக்கொண்டிருக்கிறது.

தாமரையில் எவ்வாறு மகரந்தப் பொடிகள் நிரம்பக் காணப்படுமோ, அவ்வாறே மதுரையாகிய தாமரை மலரில் குடிமக்களாகிய மகரந்தப் பொடிகள் நிறைந்திருந்தன. தாமரையில் உள்ள மகரந்தத்தில் தேன் நிரம்பி இருக்க, அதனை வண்டுகள் பருகி இன்பமுறுவது போல, மதுரையாகிய தாமரையில் மகரந்தப் பொடி போல வாழும் குடிமக்களிடம் பரிசிலாகிய தேனைப்பருகப் பரிசிலர்களாகிய வண்டுகள் சூழ்ந்திருந்தன.

இந்த அளவிற்கூட மதுரையின் மாண்பினை மொழிந்து பரிபாடல் நிறுத்தவில்லை. சேர சோழ நாடுகளைவிட, இப்பாண்டி மாநகர் சிறந்தது என்பதை வெகு சாதுரியமாக ஒரு பாடல் உணர்த்தி இருப்பது படித்துச் சுவைத்தற்குரிய பகுதியாகும். சேர நாட்டிலும், சோழ நாட்டிலும் பொழுது புலர் காலையைப் புலப்படுத்தக் கோழிகள் கூவும். அக்கோழியின் குரலைக் கேட்டுச் சேர சோழ நாட்டினர் எழுந்து தம் பணியில் ஈடுபடுவர். ஆனல், பாண்டி நாட்டில் பொழுது புலர் காலையினைப் பாண்டி நாட்டு மக்கள் கோழி கூவுவதிலிருந்து அறிந்துகொள்வதில்லை. வேதவேதியர் வேதங்களைக் காலையில் ஓத, அவ்வேத ஓசையைக் கேட்டு மதுரைமாநகர மக்கள், "ஓ! பொழுது புலர்ந்துவிட்டது.

இனி நாம் எழுவோம்!'' என்று எழுந்து தத்தம் கடன்களை ஆற்றலில் ஈடுபடுவார்கள் என்று குறிப்பிட்டிருக்கும் கருத்தினை,

> "நான்மறைக் கேள்வி நவில்குரல் எடுப்ப
> ஏம இன்துயில் எழுதல் அல்லதை
> வாழிய வஞ்சியும் கோழியும் போலக்
> கோழியின் எழாஅது எம் பேரூர் துயிலே.''

என்ற பரிபாடல் நூலின் பாடலால் அறியலாம். கோழி என்பது, சோழநாட்டுத் தலை நகரமாகிய உறையூர் என்க. இப்பெயர்க் காரணம் முன்னரே விளக்கப்பட்டது.

இன்னோரன்ன சீரும் சிறப்பும் வாய்ந்த மதுரையம்பதியில் வாழ்ந்த புலவரே **கண்ணம் புகுந்தாராயத்தனார்** என்பவர். இவர் இம்மதுரையம்பதியில் ஓலைக்கடை வைத்திருந்தார். ஓலையாவது, ஓலையால் செய்யப்பட்ட குடையாகும். இவ்வோலைகளை விற்றுவந்த கடை ஆதலினால், அக்கடை ஓலைக்கடையாயிற்று. அல்லது தாழை, பனை, தென்னங்கீற்று ஆகிய ஓலைகளைவைத்து விற்று வந்த கடை எனினும் அமையும். ஆகவே, இப்புலவர் ஓலை வணிகர் என்பதை உணர்ந்தோம். இவ்வோலைக் கடையினை மதுரை மாநகரில் வைத்து, இவர் வாணிபம் நடத்தி வந்தமையால், இவர் மதுரை ஓலைக் கடைக் கண்ணம் புகுந்தாராயத்தனார் என்று கூறப்பட்டார்.

இப்புலவருக்கு ஊர்ப்பெயராலும் மேற்கொண்டு நடத்திய தொழில் காரணத்தாலும்

அமைந்த அடைமொழிகளை நாம் நீக்கி, இவரது பெயரைக் குறிப்போமானால், கண்ணம்புகுந்தா ராயத்தனார் என்பது பெறப்படும். இப்பெயர் இவர்க்கு எக்காரணம் பற்றி வந்தது என்பதை அறிதற்கு இயலவில்லை. என்றாலும், கண்களி லிருந்து நீரைச் சிந்தும் மாலை அணிந்த ஆயத்த னார் என்று காரணம் கற்பிக்கினும் ஒருவாறு கற்பிக்கலாம். இதனால் இவர் அன்புள்ளம் மிகுதியும் உடையவர் என்று யூகிக்கலாம். அன் புடையவர்களின் கண்கள் நீரைச் சிந்தி அன் புடைமையை வெளிப்படுத்திவிடும். இந்த உண்மையை நமக்கு வள்ளுவனாரே நன்கு எடுத்து மொழிந்துள்ளார்.

**'அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்? ஆர்வலர்**
**புன்கணீர் பூசல் தரும்.'**

என்ற குறட்பாவே இதற்கு உரிய எடுத்துக் காட்டாகும். இதன் பொருள், "அன்பிற்குத் தாழ்ப்பாள் இல்லை. அவ்வன்பு வெளிப்படா திருக்க அதனை அடைத்து வைத்தற்கும் இய லாது. அன்புடையார் கண்களே, நீரைச் சிந்தி அவர்கள் அன்புடையவர்கள் என்பதை ஆரவாரத் துடன் வெளிப்படுத்திவிடும்," என்பதாம். இப் பண்புக்கு இப்புலவர் எடுத்துக்காட்டாய் இருந்த மையின், இவர் கண் அம்பு உகும் தார் ஆயத்த னார் என்று குறிப்பிடப்பட்டார் என்று ஒருவாறு கூறிவிடலாம். அம்பாவது நீர்; உகும் என்பது சிந்தும் என்னும் பொருளது. தார், மாலையாகும்.

மாலை அணிதல் எவர்க்கும் உரியது. "தார் மார்ப" என்று அடிக்கடி தமிழ் இலக்கியங் களிலே கூறப்படும்.

இனி இவ்வணிகர் புலவர் வரிசையில் வைத் துப் போற்றப்பட்ட பெருமை சான்றவர் என் பதையும் உணர்வோமாக. இவர் புலவர் என்ப தற்குக் காரணம் இவர் பாடியுள்ள பாடல் ஒன்று புறநானூற்றில் காணப்படுவது. அப்பாடல் ஒன்றே இவர் புலமை மிக்க சான்றோர் என்ப தைப் புலப்படுத்தி நிற்கிறது. அப்பாடல் புறப்பொருளின் பல துறைகளில் ஒன்முன **மகட்பாற்காஞ்சி** என்னும் துறையைப்பற்றிய தாகும். மகட்பாற்காஞ்சியாவது, "உன் மகளை எனக்கு மணமுடித்துத் தருக," என்று கேட் டோனுக்கு இணங்காமல், அவன் வேண்டுகோளை யும் மறுத்து உரைப்பதாகும்.

மதுரை ஓலைக்கடைக் கண்ணம் புகுந்தா ராயத்தனுர் பாட்டில், "மகளைக் கேட்டவர் யார்? அப்படிக் கேட்டவர்க்கு மாறுபட்டுக் கூறி யவர் யாவர்?" என்பன போன்ற கருத்துக் கள் வெளிப்படையாகத் தெரிந்துகொள்ளு தற்கு இல்லை. இவரது பாடலில் ஊரைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. அது மிகப் பழைய ஊர் என்பதை அவ்வூர் அமைப் புக்களுள் சிலவற்றை இப்புலவர் கூறி யிருப்பதால் அறிந்துகொள்ளலாம். அவ்வூர் பழைய ஊர் என்பதைச் செய்யுளில் மூதூர்

என்ற சொல்லே காட்டி நிற்கும். அம்மூதூரில் இருந்த அகழி, நீர் இன்றி வற்றி ஆழமும் இன்றித் தூர்ந்து இருந்ததாம். அவ்வூர் அகழியைச் சுற்றியிருந்த மதிற்சுவர்களும் சிதைந்து கிடந்தனவாம். அவ்வாறு சிதைந்து காணப்பட்ட மதில்களில் அமைந்த மதில் உறுப்புக்களுள் ஞாயில்கள் என்பன பயன்படுதல் இன்றிக் கிடந்தனவாம். ஞாயிலாவது வீரர்கள் மதிலுக்கு உள்ளிருந்து பகைவர்கள் தாம் எவ்விடம் இருந்து அம்பைச் செலுத்துகின்றனர் என்பதையறியா திருக்கும் முறையில் அம்பைச் செலுத்த மதிலில் அமைக்கப்பட்ட சிறு சிறு துவாரமுடைய அறையாகும். இதனையே 'ஏ அறை' என்றும் கூறுவர். அதாவது, அம்பு எய்யும் அறை என்பதாம்.

**" தூர்ந்த கிடங்கில் சோர்ந்த ஞாயில்**
**சிதைந்த இஞ்சிக் கதுவாய் மூதூர் "**

என்பன அம்மூதூர் வர்ணனையினைக் காட்டும் அடிகள்.

# 14. ஆலியார்

ஆலி என்பது ஓர் ஊர். இவ்வூர் சோழநாட்டின் உள் நாடுகளுள் ஒன்ருன ஆலி நாட்டின் தலைநகர் ; அக்காரணம் பற்றியே இது 'ஆலி' என்று கூறப்பட்டது போலும்! இது திருவாலி என்றும் வழங்கப்படும். இத்தலம் திருமங்கையாழ்வார் பிறந்த இடமும் ஆகும். இங்குள்ள திருமாலின் திருப்பெயர் **வயலாலி மணவாளன்** என்பது. தேவியார் திருப்பெயர் **அமிருத கடவல்லி** என்பது. இத்தலத்துப் பெருமாள் மேற்கு நோக்கிய திருமுகமுடையவராய், வீற்றிருக்கும் கோலத்துடன் அன்பர்களுக்குக் காட்சி அளிக்கின்ருர். இத்தலத்தில் திருமங்கையாழ்வார் பிறந்தவர் என்ருல், இத்தலத்துப் பெருமாள் மீது பாடல் பல பாடாமல் இருப்பாரோ? ஆகவே, இத்தலம் திருமங்கை ஆழ்வாரால் பாடப்பட்ட திருத்தலமாகும். இத்தலத்தில் திருமகளாகிய அமிருத கடவல்லி திருமாலாகிய வயலாலி மணவாளனைக் கட்டித் தழுவிக் கொண்ட காரணத்தால் இத்தலம் திருவாலித் திருநகர் என்ற திருப்பெயரைப் பெற்றது. இத்தலம் சீர்காழிப்பதிக்குக் கிழக்கே ஆறு கல் தொலைவில் உள்ளது.

இத்தகைய சிறப்புடைய திருவாலித் திருநகரில் இப்புலவர் பெருமாஞர் பிறந்து வாழ்ந்த கார

ணத்தால் இடத்தின் அடியாகப் பிறந்த பெய ராகிய ஆலியார் என்னும் பெயரால் வழங்கப் பட்டனர். இவர் வீரர் குடியில் பிறந்து அரசர் களின் சேனையில் சேர்ந்து, போர்த் தொழிலைப் புரிந்து வந்தவராகச் சிறப்புடன் கருதப்படுகிறார். வயிறு வளர்த்தற்கு ஏதேனும் ஒரு தொழில் வேண்டும் அல்லவா? ஆனால், இவர் வீரர் குடி யில் தோன்றியவராக இருக்கவேண்டும் என்ப தும், போர்த் தொழிலை மேற்கொண்டவராக இருக்க வேண்டும் என்பதும் இவர் பாடியுள்ள புறநானூற்றுப் பாடல் கொண்டு நாம் யூகித்து அறியக்கூடிய செய்திகளாகும். அப்புறநானூற் றுப் பாடலால் இவர் தொழிலை மட்டும் நாம் அறிந்துகொள்ளுதலன்றிப் புலவராகவும் இருந்து செய்யுள் இயற்றும் சிறப்பும் பெற்றார் என்பதையும் உணர்ந்துகொள்கிறோம்.

ஆலியார் திருப்பெயர் முன் எந்த விதமான அடைமொழிகளும் அமைந்தில. முன்னர் எடுத் துக் கூறப்பட்ட புலவர்கட்கெல்லாம் முன்னும் பின்னும் அடைமொழிகள் அமைந்து, அவர்கள் தொழிலையும் ஊரையும் உணர்த்தி நிற்கின்றன. இங்கு எடுத்துக் கூறப்படும் புலவர் திருப்பெயர், இப்புலவரது இடத்தை அறிதற்குத் துணை செய் கின்றதே அன்றி, இவர் மேற்கொண்ட தொழிலை உணர்த்தி நிற்கவில்லை. என்றாலும், இவரது வாக்காகிய பாடல் மூலமே இவரது தொழில் போர் முனை கண்ட போர்த் தொழிலாகும் என் பதை அறிந்துகொள்ள நேரிடுகிறது. இக்கார

ணம் பற்றியே இவரும் தொழிலோடு புலமையும் மேற்கொண்ட புலவர் வரிசையில் வைத்துக் கூறப்பட்டார் என்க.

ஆலியார் பாடியுள்ள பாடல், வீரன் ஒருவன் கூறிய மொழிகள் போல அமைந்துள்ளது. அவ் வீரன் மொழிந்த மொழிகளாக அப்பாடல் அமைந்திருப்பதால் இவர் அவ்வீரர் பண்பு அமைந்திருந்த பெருவீரர் என்பது தெள்ளத் தெளிந்த உண்மையன்றோ?

ஆலியார் தம் பாட்டில் வேந்து என்று பொதுப் படக் குறித்திருப்பதால், இவர் குறிப்பிடும் வேந்து யாவன் என்பதை உணர்தற்கு இல்லை. இவர் குறிப்பிடும் வேந்தன் இயல்பினை இப்புலவர் நன்கு எடுத்து இயம்பியுள்ளார். சில சொற்களால் அவ்வேந்தனைப் பற்றி இவர் குறிப்பிட்டாலும், அச்சில சொற்களில் பல கருத்துக்கள் நிரம்பியுள்ளன. அவ்வேந்தன் தன்னிடம் இருந்த படை வீரர்களைத் தன் கண்ணினும் அருமையாகக் கருதி வந்தான் என்று நாம் அறிந்துகொள்ளலாம். தான் உண்டு களித்தலை விரும்பாமல், தனக்கு முன்னர்த் தன் படை வீரர் உண்டு களித்தலையே விரும்பியவன் என்பது பெறப்படுகிறது. "தனக்கு விஞ்சியது தருமம்," என்னும் பழமொழிக்கு விலக்காக இவ்வேந்தன் வாழ்ந்தவன் ஆவன். இவன் ஈத்து உவக்கும் இன்பத்தை நன்கு உணர்ந்தவன்: நன்கு கலக்கிய மதுவை வீரர்க்கு ஈந்து, தான் மேலே நீராய்

இருந்த மதுவை உண்டான் என்றாலும், போருக்கு மட்டும் தான் முந்திப் போகும் எண்ணமுடைய வனாய் இருந்தவன். "பந்திக்கு முந்திக்கொள்; படைக்குப் பிந்திக்கொள்," என்னும் இக்காலத்துப் பழமொழிக்குச் சிறிதும் இடங்கொடாதவன். இவன், போருக்குப் புறப்படும் போது, இதழைக் கவ்வி வீர முழக்கம் செய்துகொண்டு செல்பவன். அப்படிச் செல்லும்போது, பகைவருடைய மதிலைச் சூழ்ந்து, "நீ முற்படுக," என்று வேற்று வீரனுக்குக் கட்டளையிடாமல், தானே போர் முனையில் முந்தி நிற்பவன். இங்ஙனம் இவன் போரில் முனைந்து நின்ற முறைமையினை ஆலியார்,

> "நேரார் ஆர்எயில் முற்றி
> வாய்மடித்து உரறிநீ முந்துஎன் னானே."

என்று கூறியுள்ளார். இதன் பொருள், "பகைவருடைய அரிய மதிலைச் சூழ்ந்து, இதழைக்கவ்வி, முழங்கிக்கொண்டு 'நீ முற்படுக,' என்று கூறாதவனாகித் தான் போர் முனையில் எதிரிகளின் முன் நிற்பவன்," என்பதாம்.

இவ்வாறு அழகிய முறையில் உள்ளனவற்றை உள்ளவாறு கூறிப் படிப்பவரைக் களிக்கச் செய்யும் பாடல்கள் பல, நம் பண்டைய தமிழ் நூல்களில் மலிந்து காணப்படுகின்றன. நம் பழங்காலத் தமிழ்ப் பெருமக்கள் தாங்கள் பல் வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்தாலும், தொழிலே கருத்தாகவும் பொருள் தேடலே

பெருநோக்கமாகவும் கொண்டுவாழாமல், தமிழ் அணங்கிற்குத் தங்களாலான தொண்டையும் செய்ய வேண்டும் என்பதற்காக அக்காலத் தமிழ் நாட்டு நாகரிகப் பண்பாடுகளைப் பாடல் மூல மாகப் பாடித் தந்து சென்றிருக்கின்றனர். அவ் வாறு அவர்கள் பாடி வைத்திலர் என்ருல், இது போது நாம் நம் பண்டைய பெருமையினைப் பேசிப் பெருமதிப்புக் கொள்ள வழியற்றுப் போய் இருப்போம். நம் பண்டைய மாண்புகளை அறியத் தம் புலமைப் பெருக்கால் பாடல் பல இயற்றிச் சென்ற அன்ஞரை மறவாமல் அவர் பாடல் பொருள்களையும் மறவாமல் போற்றுதல் நம் தலையாய கடஞகும்.

# 15. காவற்பெண்டு

சங்ககாலம் ஒரு பொற்காலம். அக்காலத்துப் புலவர் பெருமக்கள் பாடியுள்ள பாடல்களாலே யே இன்று நாம் தமிழர் என்ற பெருமையுடன் தலைநிமிர்ந்து நிற்கின்றோம்; நமது பண்டைய பெருமையினை உணர்கின்றோம்; நாகரிகத்தில் நனி சிறந்தவர்கள் என்ற பெருமிதத்துடன் துலங்குகின்றோம்; பிற நாட்டவர்களும் நமது தொன்மையினையும் மேன்மையினையும் போற்றிப் புகழ்கின்ற நிலையைப் பெற்றுள்ளோம். இவை உண்மை; வெறும்புகழ்ச்சியல்ல.

இங்ஙனம் பெருமை தரத்தக்க நிலையில் இருந்தவர்கள் ஆண்பாற்புலவர்கள் மட்டும் அல்லர்; பெண்பாற்புலவரும் ஆவர். சங்க காலத்தில் திகழ்ந்த பெண்பாற்புலவர் பலர். அவர்களே காக்கைபாடினியார் நச்செள்ளையார், குறமகள் இளவெய்யினி, பாரி மகளிர், பெருங்கோழி நாய்கன் மகளார் நக்கண்ணையார், பேய் மகள் இளவெயினி, மாலபித்தியார், மாறோக்கத்து நப்பசலையார், வெண்ணிக்குயத்தியார், வெறி பாடிய காமக்கிழத்தியார், பொன் முடியார் உள்ளிட்டவர்கள். இவர்களுள் ஒருவரே காவற்பெண்டு என்னும் பெயருள்ள பெண்பாற்புலவர்.

இவ்வம்மையார் தம் இயல்புக்கு ஏற்ற

தொழிலை மேற்கொண்டே புலவர் மணி யாயும் திகழ்ந்தவர். இவர் குழந்தைகளைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துவரும் அரிய பொறுப்பு வாய்ந்த பணியினை மேற்கொண்டு விளங்கியவர். இதனை இவர்க்கு அமைந்துள்ள பெயர்கொண்டே உணர்ந்துகொள்ளலாம். இவ் வம்மையார் பெயர் **காவற்பெண்டு** என்பதே. இவ்வம்மையார்க்கு இவர் பெற்றோர் எப் பெயர் இட்டு வழங்கினர் என்பதை நாம் அறி தற்கு இல்லை, காவல் என்பது ஈண்டு வீடு காவலோ, நாடு காவலோ, வாயிற்காவலோ அன்று; குழந்தையைக் காத்து வந்த காவல் ஆகும். இக்காவலை இப்பெண்மகளார் புரிந்து வந்தமையின் காவற்பெண்டு எனப்பட்டார். பெண்டு என்னும் சொல் பெண் என்னும் பொருளது.

குழந்தைகளைப் பெறுபவர் பெண்டிர். இவர் களை நற்றாயர் என்பர். இவர்கள் பிள்ளையைப் பெறுதல் மட்டும் அன்றி, அப்பிள்ளைகளைப் பாதுகாக்கும் கடமையையும் உடையவர்கள். இதனைச் சங்ககாலப் பெண்பாற்புலவராகிய பொன் முடியார் என்பவர், "ஈன்று புறந்தருதல் என்றலைக்கடனே," என்று கூறுதலாலும், "ஈன்று புறந்தந்த எம்மும் உள்ளான்" என்ற அகநானூற்றடியாலும் தெரிந்துகொள்ளலாம். செல்வக் குடியில்—அரசர் குடியில்—பிறக்கும் பிள்ளைகளைக் காக்க வேண்டிய பொறுப்பினை நற்றாய் மேற்கொள்ளாது பிள்ளைகளைக் காத்

தற்கென ஒரு பெண்டிரை அமைப்பர். அத் தகைய பெண்டிர் செவிலித்தாயர் என்ற சிறப்புப் பெயருக்கும் உரியவர். பெற்ற தாயினும் இச்செவிலித்தாயர் குழந்தையை நன்கு கவனித்துக்கொள்வர். குழந்தையை உண்ண வைப்பதும் உறங்க வைப்பதும் இச் செவிலித்தாயரின் பொறுப்பே ஆகும். குழந் தைக்கு நோய் முதலிய துன்பம் வரினும், பெரி தும் துயருறுபவள் செவிலித்தாயே. இத்தகைய அரும்பெரும்பணியைப் பெற்றுத் திகழ்ந்தவர் காவற்பெண்டாகிய இப்பெண்பாற்புலவர் என்க.

இனிக் காவற்பெண்டாம் இப்பெண்பாற் புலவர், எதனுல் புலவர் வரிசையில் வைத்து மதிக்கத் தக்கவர் என்பதையும், எங்கு யாருக் குக் காவற்பெண்டாய் இருந்தவர் என்பதையும் அறிய வேண்டுவது நமது கடமையாகும்.

இவ்வம்மையார் சோழன் போரவைக் கோப் பெருநற்கிள்ளியை வளர்த்த செவிலித்தாயர் ஆவர். அதாவது, காவற்பெண்டிர் ஆவர். இவ் வம்மையார் இச்சோழ மரபுப் பிள்ளையை அன் புடன் காவல் புரிந்துவந்த காரணத்தால், காதற் பெண்டிர் என்றும் வழங்கப்பட்டவரானுர். இக்காதல், தாய்மைக்காதல். மக்களிடத்தில் குழந்தைகளிடத்தில் காதல் காட்டுதலைத் "கடந் துள்ளோர்களும் கடப்பரோ மக்கள்மேல் காதல்" என நைடதத்தில் வரும் அடியால் அறிக.

சோழன் போரவைக் கோப்பெருநற்கிள்ளி தித்தன் என்னும் பெயரிய சோழனுக்கு மகனு வன். தித்தன் உறையூரில் இருந்த சோழன். நொச்சிவேலித் தித்தன் என அகநானூறு கூறு கிறது. நொச்சி மரங்களை வேலியாக உடைய உறந்தையில் வாழ்ந்த தித்தன் என்பது இதன் பொருள். இவ்வாறே இவன் உறந்தையில் இருந் தவன் என்பதைப் புறநானூறும் 'மாவண் தித்தன் வெண்ணெல்வேலி யுறந்தை' என்கிறது. உறந்தை என்பது உறையூர் ஆகும். தித்தன் வீரத்திலும், ஈரத்திலும் சிறந்தவன். இதனை, 'வெல்போர் அருந்தித்தன்' என்றும் 'மாவண் தித்தன்' என்றும் இவனைப்பற்றிக் கூறி யிருப்பது கொண்டு தெளிக. முறையே இத்தொடர்கள் போரில் இவன் ஈடுபடின் வெற் றியே கொள்ளும் வகையில் போர் புரிய வல்ல வன்; பிறர் பொருதற்கரிய தித்தன் என்பதை யும், சிறந்த கொடைத்திறம் வாய்ந்த தித்தன் என்பதையும் விளக்கிக்கொண்டு நிற்கின்றன. இவ்வாறு இவனது வீரத்தைச் சாத்தந்தையார் என்னும் புலவரும், இவனது கொடைச்சிறப் பைப் பரணரும் புகழ்ந்து கூறியுள்ளனர்.

மதுரை நக்கீரர், சோழநாட்டுப் பிடவூர்க் கிழார் மகன் பெருஞ்சாத்தனைப் பாடிய பாட்டில், தித்தனையும் பாடியுள்ளார் எனில், தித்தனது சிறப்பு நமக்குப் புலனாகிறது. அப்பாட்டில் தித் தன் நல்ல அறிவையே அணியாகப் பெற் றவன் என்றும், சீர் சான்ற விழுச்சிறப்புடை

யவன் என்றும், யானைப்படையுடையவன், அதனோடு யானை வன்மை பெற்றவன் என்ற பொருளில் 'சிறுகண் யானைப் பெறலருந் தித்தன்' என்றும் புகழப்பட்டுள்ளான்.

தித்தன் வாழ்ந்த உறையூரின் சிறப்பைப் புலவர் பலர் பாடிப் புகழ்ந்துள்ளனர். மதுரை நக்கீரனுர் "செல்லா நல்லிசை உறந்தை" என்கிருர். அதாவது, கெடாத நல்ல புகழையுடைய உறந்தையாம். 'வெண்ணெல்வேலி உறந்தை' என்பர் பரணர்.

இந்த அளவிலும் உறந்தையைப் பரணரும், மதுரை நக்கீரரும் புகழ்ந்து நின்ருர் அல்லர். மகளிர் மலர் பறிக்கும் அழகினை 'அவல் வகுத்த பசுங்குடையால் புதல்முல்லை பூப்பறிக்குந்து' என்று பாடியுள்ளனர். இதன் பொருள் பள்ளமாகப் பனைமட்டையால் அமைத்த குடையில் புதரில் வளர்ந்த முல்லையைப் பறிப்பர் என்பது. இவ்வாறு வருணித்தவர் பரணர்.

மதுரை நக்கீரர் உறந்தையின் உழவர்களின் இயல்பை நன்கு இயம்பியுள்ளனர். அவர்கள் மருத நிலத்தை நன்கு உழுது அதன் பயனை நன்கு துணையாய் இருந்து உழைக்கும் எருதுகள் வயிருர உண்டு உவக்க முல்லை நிலங்களில் மேய விடுவர் என்றும், முயல் இறைச்சி, வாளை மீன், பழஞ்சோறு இவற்றைப் புசித்துப் பூரிப்பர் என்றும், மலர் சூடி மகிழ்வர் என்றும், கள்ளைப்பருகிப் பரவசம் உறுவர் என்றும் பாடி மகிழ்கின்ருர்.

மாதர்களைப் பற்றிக் கூறும் போது, மூங்கில் போலும் தோளையுடையவர்கள், மென்மையான சாயலைப் பெற்றவர்கள், தினையுண்ண வரும் கிளிகளை ஓட்டுபவர்கள் என்றும் பாடியுள்ளனர்.

பறவைகளைக் கூற வந்த போது, கானக்கோழி நீர்க் கோழியினைத் தான் குரல் எழுப்பிக் கூப்பிடும் என்கிறார். அகன்ற சேற்றினையுடைய நீர் நிலைகளிலிருந்து பறவைகள் எழுந்து பறக்கும் என்று வருணித்துள்ளார்.

இன்னோரன்ன சிறப்பினையுடைய உறந்தையில் வாழ்ந்தவன் தித்தன். இவன் மகனை போரவைக் கோப்பெருநற்கிள்ளி என்ன காரணத்தாலோ தந்தையைப் பகைத்துக்கொண்டான்.

இப்பகைமை காரணமாகத் தனக்குரிய உறந்தை உரிமையையும் இழக்க நேர்ந்தது. தந்தையைத் தணந்தான்; அரச உரிமையையும் இழந்தான். இதனால் வறுமையால் வாடினன். 'சோழ வளநாடு சோறுடைத்து' என்னும் சோழ நாட்டில் பிறந்து சிறக்கச் சோறுண்டு வாழ வேண்டிய அவன், சோளக் கூழோ, கேழ்வரகுக் கூழோ அருந்துவதற்கு இயலவில்லை. புல்லரிசிக் கூழே அருந்தும் விதி அவனுக்கு இருந்தது. என்னே! அவனுக்கு அமைந்த ஊழின் வன்மை பொய்க்குமா? 'ஊழிற் பெருவலி யா உள?' என்னும் பொய்யா மொழியார் வாக்குப் பொய்க்குமா? அவன் அவ்வாறு புற்கை (புல்லரிசிக்கூழ்.) உண்டு வாழ்ந்ததைப் 'புற்கை உண்டும்'

பெருந்தோளன்னே ' என்னும் அடியால் தெரிய வருகிறது. இத்தொடரால், இவன் புற்கை உண்டும் வாடாத வனப்புடைய பெருந்தோளனாய் இருந்தமை பெறப்படுகிறது. கடுகு செத்தாலும் காரம் போகுமா? சோழ மரபினனானை தித்தன் மகன் அல்லனோ இவன்?

சோழன் போரவைக் கோப்பெருநற்கிள்ளியைச் சாத்தந்தையார் என்னும் ஆண்பாற்புலவரும் பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையாராம் பெண்பாற்புலவரும் பாடியுள்ளனர்.

சாத்தந்தையார் பாடல்களால் இவனது வீரமும், முக்காவல் நாட்டு ஆமூர் மல்லனை வென்றதும் அறிய வருகின்றன. நக்கண்ணையார் பாடல்களால் அவ்வம்மையார் இவனைக் காதலித்த குறிப்பும் காணப்படுகின்றது. சாத்தந்தையார் இவனைப் பாடிய பாடல்கள் மூன்று. நக்கண்ணையார் பாடிய பாடல்களும் மூன்று. இந்த ஆறு பாடல்களும் புறநானூற்றில் இன்றும் பொலிகின்றன.

போரவைக் கோப்பெருநற்கிள்ளி சோழ மரபினன் என்பதை 'ஆர்நார்ச் செறியத் தொடுத்த கண்ணிக் கவிகை மன்னன்' என்னும் சாத்தந்தையார் இவனைப் பற்றி அறிவிக்கும் அடியால் அறியலாம். அதாவது, நாரால் கட்டப்பட்ட ஆத்தி மாலையினையும், பிறர்க்கு ஈயக் கவிந்த கையையும் உடைய வீரன் என்பது. "நல்ல குடிப் பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்

இல்லை எனமாட்டார் இசைந்து," என்பது நம் முன்னோரது நடை முறை வாக்கன்றோ? ஆகவே, இவனதுகை, கொடுக்கக் கவிந்த கை ஆயிற்று.

போரவைக் கோப்பெருநற்கிள்ளி முக்காவல் நாட்டு ஆமூர் மல்லனொடு போர்தொடுக்க வேண்டிய வாய்ப்பு நேர்ந்தது. இவனோ நாடிழந்தவன்; தந்தையாரின் சார்பு நீங்கினவன். இவனுடன் போர் புரிய வருபவன் சிறந்த வீரன். மல்லன் என்னும் பெயரே அவனது உடல் வன்மையினையும், மற்போர் தொடுக்கும் திறனையும் வெளிப்படுத்தி நிற்கிறது. ஆகவே, பெருநற்கிள்ளி கலாட்படையுடனும் யானைப் படையுடனும் போர்க்குச் சென்றனன். இவனது படையின் ஒலி கடல் ஒலியினும் சிறந்ததாய் இருந்தது. யானையின் ஓசையோ, கார்கால இடி ஓசைபோல இருந்தது.

ஈண்டு ஓர் ஆசங்கை எழலாம். அதாவது, நாடு இழந்து வறுமையால் வாடிய போரவைக் கோப்பெருநற்கிள்ளிக்குப் படை ஏது என்பதே அந்த ஐயம். இவன் தந்தையார் தம் மகன் போருக்குச் செல்வதை அறிந்து தம்படையினை அனுப்பி இருக்கவேண்டும். இன்றேல், ஏது படை? 'தானுடாவிட்டாலும் தன் தசை ஆடும்,' என்பது பழமொழி அன்றோ?

விபீஷணன் தன் தமையனான இராவணனை வெறுத்தான்; பழித்தான்; இந்த அளவிலும் நில்லாமல் தன் அண்ணனுக்கு நேர்ப் பகைவ

னை இராமனிடமே சென்று சரண் புகுந்தான்; அந்த இராமனால் இராவணன் இறக்கவும் வழி வகைகள் செய்தான். இராவணனும் இறந்தான். தன் அண்ணன் நல்லோன் அல்லன். இறந்ததே நல்லது என்று எண்ணி மகிழ்ந்தான் அல்லன் விபீடணன்; தன் தமையன் இறப்புக் குறித்து வாய்விட்டு அரற்றினன். அவ்வரற்றல் யாவர் உள்ளத்தையும் உருக்க வல்லது.

**" உண்ணுதே உயிர்உண்ணு தொருநஞ்சு ;**
**சனகிஎனும் பெருநஞ் சுன்னைக்**
**கண்ணுலே நோக்கவே போக்கியதே**
**உயிர் ! நீயும் களப்பட் டாயே !**
**எண்ணுதேன் எண்ணியசொல் இன்றினித்தான்**
**எண்ணுதியோ ? எண்ணில் ஆற்றல்**
**அண்ணுவோ ! அண்ணுவோ ! அசுரர்கள்தம்**
**பிரளயமே அமரர் கூற்றே ! "**

என்னும் இப்பாடலைப் படித்துப் பாருங்கள். உண்மை தெரியவரும்.

இதனை நோக்கும் போது, தன் உறவு பற்றி இரக்கமே தோன்றும் என்பது புலனுகிறது. ஆகவே, தித்தன் தன் மகன் பகை கொண்டு வெளியேறினுலும், இவன் மல்லனோடு போர் புரியத் தொடங்கிய போது தன் படையினை அனுப்பி இருப்பன் என்று யூகிக்க வேண்டி உளது. அப்படையின் வன்மையோ ஆர்ப்பெழு கடலினும் பெரிது; "அவன் களிறே கார்ப் பெயல் உருமின் முழங்கல் ஆனுவே" என்றனர் சாத்தந்தையார்.

போரவைக் கோப்பெருநற்கிள்ளி படைப் பலத்துடன் போர்க்குச் சென்ருனாயினும், தனக் குத்தானே உதவி என்பது போல, தானே தனித்துப் போர்செய்து வெற்றி காணக் கூடிய வன். இவன் கையகப்பட்டவர் எவராயினும் தப்புதல் அரிது. இவன் செய்யும்போர் விரைந்து செய்யும் போர். இது சாத்தந்தையார், "தைத் தற்குச் செலுத்தும் ஊசியைவிட வேகமுடை யது" என்ற உவமை காட்டி உரைப்பதால் அறிய வருகிறது. இதனைப் புலவர் வாக்காகிய "ஊசியின் விரைந்தன்று மாதோ ஊர் கொளவந்த பொருநனொடு ஆர்புனை தெரியல் நெடுந்தகை போரே." என்ற அடிகளால் அறிந்துகொள்ள லாம். ஈண்டு ஊர் கொள வந்த பொருநன் ஆலூர் மல்லனாய் இருக்க வேண்டும். ஆர் புனை தெரியல் நெடுந்தகை போரவைக்கோப்பெரு நற்கிள்ளி என்று கூற வேண்டுவதில்லை. இவன் குலமாலையாம் ஆத்தியைப் புனைந்திருந்தமை யின், "ஆர்புனை தெரியல் நெடுந்தகை" எனப்பட்டான். ஆத்தி மாலை சோழர்க்கு உரியது என்பதை ஈண்டு நினைவு கொள்க.

இன்னோரன்ன குடிச்சிறப்பும் மறச்சிறப்பும் கொண்ட கோப்பெருநற்கிள்ளி முக்காவல் நாட்டு ஆலூர் மல்லனுடன் பொருது வென்ற சிறப்பைக் காண்போமாக.

மல்லன் ஆமூரினன் என்பதும் மிக்க வன்மை யுடையவன் என்பதும் அவனைப்பற்றிச் சாத்தந்

தையார் "ஆமூர் ஆங்கண் மைந்துடை மல்லன்" என்று சுட்டி இருப்பதால் அறியலாம். அவனது வலியை அடக்கினான் என்பதை "மதவலிமருக" என்னும் தொடர் விளக்கிக்கொண்டிருக்கிறது. மல்லன் மற்போரில் சிறந்தவன். இக்குறிப்பு அவன் பெயரால் அறிய வருகிறது என்பதை முன்பே கண்டோம். ஆகவே, அவனோடு வாட்போரோ, விற்போரோ பெருநற்கிள்ளி தொடங்காமல், மற்போரே தொடங்கினான்; அவனோடு மற்போரிட்டு அவனைக் கீழே சாய்த்தான்; சாய்ந்த அவன்மீது ஒரு காலை ஊன்றினான். அப்பொழுது, மல்லன் சோழனது பிடியினின்று விலகப் பல முயற்சிகளைச் செய்தான். இத்தகைய அவனது செயலைத் தடுக்க மற்றொரு காலால் அவனது முதுகையும் வளைத்துக் கொண்டான் கிள்ளி. இந்தக் காட்சியினைப் புலவர் சாத்தந்தையார், "ஒரு கால் மார்பொதுங்கின்றே; ஒரு கால் தார்தாங்கிப் பின் ஒதுங்கின்றே" என்று பாடி அறிவித்துள்ளனர். இந்த அளவிலும் பெருநற்கிள்ளி நின்றான் இல்லை; அவன் கால்களையும் தலையையும் முரித்து வெற்றி கொண்டான். மல்லனது தலையைக் காலைப் பெருநற்கிள்ளி முரித்ததற்கு நல்ல உவமையினைப் புலவர் குறிப்பிட்டுள்ளார். அதுவே "பசித்துப் பணை முயலும் யானைபோல இருதலை ஒசிய" என்பது. அதாவது, பசிகொண்ட யானை மூங்கிலை முரிப்பதுபோலக் கரங்களும் தலையும் முரிய மோதி என்பதாம்.

சாத்தந்தையார் பெருநற்கிள்ளியின் வீரத்தை நேரில் கண்டே இவ்வாறெல்லாம் பாடியிருக்கிறார்; தாம் கண்டதையே கூறியுள்ளார். இந்த வியப்பினைத் தம்மளவில் துய்க்கவிரும்பவில்லை. இக்காட்சியினைப் புலவர் பெருநற்கிள்ளியின் தந்தையான தித்தனும்நேரில் தன் கண்களால் காணவேண்டும் என்று எண்ணுகின்றார் - எண்ணரிய எண்ணத்தை வெளிப்படவும் தம் பாட்டிலும் இணைத்துவிட்டார். இதோ பாருங்கள்:

**" நல்கினும் நல்கா ஞயினும் வெல்போர்ப்**
**போரருந் தித்தன் காண்கதில் அம்ம."**

என்னும் அவரது உணர்ச்சி மிக்க அடிகளைப் பாடிய புலவருக்கு ஓர் ஐயம் உள்ளத்தில் உண்டு. தித்தன் தன் மகனது போர் குறித்து வியப்பானே வியக்கமாட்டானே என்பதே ஐயம். காரணம், தந்தைக்கும் மகனுக்கும் ஏற்பட்ட பகைமை என்றாலும், தித்தன் காணவேண்டும் என்பதே புலவரது உள்ளக் கிடக்கை.

போரவைக் கோப்பெருநற்கிள்ளியின் தோற்றப் பொலிவும் போர்த்திறனும், பெருங்கோழி நாய்கன் மகளார் நக்கண்ணையார் என்னும் பெயரிய மாதராரைக் காதலிக்கவும் செய்துவிட்டன. இவனது தோற்றப் பொலிவினையும், வீரச்சிறப்பையும், " அடிபுனைதொடுகழல் மை

அணற்காளை" என்று இவ்வம்மையாரே சிறப்பித்திருக்கின்றனர். இத்தொடரின் பொருள், "வீரத்தண்டை அணிந்த கரிய தாடியையுடைய காளை போன்ற வீரன்" என்பது.

நக்கண்ணையார் புலவரும் ஆவார். இவ்வம்மையாரின் புலமை இச்சோழனைக் காதலித்துப் பாடிய மூன்று பாடல்களால் அறிய வருகின்றது. இப்பாடல்கள் வழியே நக்கண்ணையார் கோப்பெருநற்கிள்ளியைக் காதலித்தனர் என்பது தெரிகிறது. இவ்வம்மையார் இவன் மல்லனெடு பொருத போது, மறைந்து நின்று அக்காட்சியினைக் கண்டு களித்தனர். அவன் மாட்டுக் கொண்ட காதலே காரணமாகத் தம் உடம்பு பொன்னிறம்போலத் தேமல் பரவும் நிலையினையும் உற்றனர். இதனை இவ்வம்மையாரே, "யாமே, புறஞ்சிறை இருந்தும் பொன் அன்னம்மே," என்று பாடியிருப்பதால் அறிகிறோம். தேமல் நிறம் பொன்னிறம் ஆதலின் "பொன் அன்னம்மே" எனப்பட்டது. இவ்வம்மையார் தம் மேனி தேமல் படரும் நிலையில்மட்டும் அன்றிக் காதலால் மெலிந்து, வளைகள் கழலும் நிலையினையும் உற்றனர். தாம் காதலித்த சோழனைப் போர்க்களத்திலே சென்று தழுவலாம் என்றும் எண்ணினர்; ஆனல், அது செய்தற்கு அஞ்சினர். அவ்வச்சம் அங்கிருந்த அவையினர் என்னவென்று கூறுவரோ என்பதனுல் எழுந்த அச்சமாகும். இதனையும் இவ்வம்மையார், "அடு தோள் முயங்கல் அவை நாணுவலே" என்று தம்

பாடலில் குறிப்பிட்டிருப்பதால் உணரலாம். தம் வளை கழன்றது குறித்துத் தாய் என்ன கூறு வளோ என்றுகூட இவ்வம்மையார் அஞ்சியுள் ளனர் என்பதும் அறிய வருகிறது. "தொடி கழித்திடுதல் யான் ஆய் அஞ்சுவல்" என்ற அடி யைக் காண்க.

உலகம் பலவிதம். ஒருமித்த கருத்தைக் காணு தல் அரிது. இந்நிலையினைக் கோப்பெருநற் கிள்ளியின் வாழ்க்கையில் காணலாம். இவன் மல்லனோடு பொருதான்; வெற்றியையும் பெற் றான். இவ்வெற்றி குறித்து, ஒரு சாரார், இவனது வெற்றி அன்று என்றும், மற்றொரு சாரார் இவனது வெற்றிதான் என்றும் கூறி னர். இதனை "ஆடு அன்று என்ப ஒரு சாரார்; ஆடு என்ப ஒரு சாரார்," என்றதனால் அறிக. ஆடு என்னும் மொழி வெற்றி என்னும் பொரு ளைச் சுட்டி நிற்கின்றது. இவ்வம்மையார்தம் கருத்து அவன் வென்றான் என்பதே. அதனைத் தாம் நேரில் கண்டதாகவும் கூறுகிறார். "யான் கண்டனன் அவன் ஆடுதலே" என்ற அடியினைக் காண்க.

இவ்வாறெல்லாம் நக்கண்ணையார் பாராட்டி என்ன பயன்? கோப்பெருநற்கிள்ளி இவரை மணந்தான் என்ற குறிப்பு அறிதற்கு இல்லை. இவ்வம்மையார் அவனைக் காதலித்த குறிப்புத் தான் பெறப்படுகின்றதே அன்றி, அவன் இவ் வம்மையாரை விரும்பிய குறிப்புக் காணப்பட வில்லை.

"என்னே! காவற்பெண்டு என்ற தலைப்பில், மற்றொன்று விரித்தல் என்ற வகையில், போரவைக் கோப்பெருநற்கிள்ளியின் சிறப்பே பேசப்பட்டதே!" என்று கருத வேண்டா. காவற்பெண்டின் சிறப்பினை முற்ற முடிய உணர வேண்டுமானால், கோப்பெருநற்கிள்ளியைப் பற்றித் தெரிந்தே ஆகவேண்டும். இவனது வெற்றிக்கும், வீரத்திற்கும், உடற்பொலிவிற்கும் இவ்வம்மையார் தாம் காரணர் எனில், அஃது உண்மையாகுமே அன்றி, வெறும்புகழ்ச்சி அன்று.

இவ்வம்மையார் வீரக்குடி மரபினர். அம்மரபினர் என்பதை இவரது பாட்டே அறிவித்துக் கொண்டிருக்கிறது. அப்பாட்டில் வீர உணர்ச்சி மிக்க உரைகளே பொருந்தியுள்ளன. இவரது பாட்டிற்குத் திணை வகுத்த புறநானூற்று உரையாசிரியர், 'ஏறாண்முல்லை' என்று குறிப்பிட்டுள்ளனர். ஏறாண்முல்லையாவது, 'எதிர் இல்லாதபடி ஆண்மைத் தன்மை மேன்மேல் ஏறு நின்ற குடி ஒழுக்கத்தினை உயர்த்திச் சொல்லுதல்' என்பதாம். 'மறம் கனலும் ஏறாண்குடி' என்பர் புறப்பொருள் வெண்பா என்னும் நூலின் ஆசிரியர். இத்தகைய வீரக் குடியில் தோன்றிய காவற்பெண்டு தாம் பாதுகாத்து வந்த கோப்பெருநற்கிள்ளிக்கு இளமை முதற் கொண்டே வீரத்தையும் ஊட்டி வளர்த்திருப்பார் அல்லரோ? உடல் வளத்தையும் கவனித்து வளர்த்து வந்திருப்பார் அல்லரோ? ஆகவே, இவ்வம்மையாரின் வளர்ப்பின் சிறப்பே கோப்பெரு

நற்கிள்ளியின் வெற்றிச் சிறப்பிற்குக் காரணம் என்பதில் ஐயம் உண்டோ? இல்லை.

பிள்ளைகளின் போக்கிற்குத் தாய்மார்களே காரணம் என்பது பண்டும் இன்றும் உணர்ந்து வரும் ஓர் உண்மையாகும். சிவாஜி மன்னர் பெருவீரராய் விளங்கியதற்குக் காரணம், அம் மன்னர் தம் குழந்தைப் பருவத்தில் வளர்க்கப் படும்போதே ராமாயண, பாரதக் கதைகளைக் கேட்டு வந்த பயனே ஆகும். அக்கதைகளில் இராமனது வீரம், அருச்சுனனது வெற்றிச் சிறப்பு ஆகியவைகளே சிவாஜி மன்னரைப் பெருவீரராகச் செய்தன. இன்று கூடச் சப்பான் நாட்டில் தம் பிள்ளைகளுக்கு வீரர்களுடைய வரலாறுகளையே பெரிதும் தாய்மார் கூறித் தம் பிள்ளைகளை வீரர்களாகத் திகழச் செய்கின்றனர் என்பது வரலாற்று உண்மை. இந்நிலையில் காவற்பெண்டிர் கோப்பெருநற்கிள்ளியை வளர்த்தமையால்தான் அவன் வீரனாய்த் திகழ்ந்தான்.

இனி இவ்வம்மையார் புலவர் என்பதனையும், வீரக்குடியினர் என்பதையும் அறிவோமாக. இவ்வம்மையார் பாடியதாக ஒரே பாடல் புறநானூற்றில் காணப்படுகிறது. அப்பாடலின் பொருட்செறிவையும் இனிதின் நுகர்வோமாக.

இவ்வம்மையார் இல்லம் போந்த ஒருவனோ ஒருத்தியோ இவர்தம் இல்லின் தூணைப்பிடித்துக்கொண்டு, "அம்மையீர்! உங்கள் மகன்

யாண்டுளன் ?'' என்று வினவினர். அது போது இவ்வம்மையார் விடுத்த விடை "என் மகன் எங்குளன் என்று வினவுகிருய்? அவன் எங்குளன் என யான் அறியேன். என்றாலும், அவன் இருக்கும் இடத்தை ஒருவாறு என்னல் அறிவிக்க இயலும். அதாவது அவனைப் பெற்ற வயிறு இது. அவனைக் காண விழைந்தால் போர்க்களத்திற்குச் சென்றால் காணலாம். அங்கு தான் அவன் தோன்றுவான்,'' என்பதாம். இங்ஙனம் கூறும்போது, தன் மகனது வீரத்தை ஓர் உவமை கூறி அறிவித்ததை நாம் பாராட்டாமல் இருக்க இயலாது. அதாவது, தம் மகனைப் புலியாக உவமிக்கிருர் ; தம் வயிற்றை அப்புலி கிடந்த மலைக்குகையாகக் கூறுகிருர். இனி இவ்வம்மையார் பாடிய பாட்டைப் பாருங்கள். அப்பாட்டு,

" சிற்றில் நற்றூண் பற்றி, 'நின்மகன்
யாண்டு ளான்?'என வினவுதிர்; என்மகன்
யாண்டுளன் ஆயினும் அறியேன் ஓரும் ;
புலிசேர்ந்து போகிய கல்அளை போல
ஈன்ற வயிறோ இதுவே ;
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே.''

என்பது.

இப்பாட்டை அறியும் போது இவ்வம்மையார், திருமணம் முடித்து, இல்லறத்தை மேற்கொண்டு, பிள்ளைப்பேற்றையும் பெற்று வாழ்ந்தவர் என்பது தெரிகிறது. இல்லை என்றால், "என் மகன் யாண்டுளன் ஆயினும் அறியேன்''

என்றும், "ஈன்ற வயிறோ இதுவே" என்றும் கூறி இருப்பரோ? இரார். தொழிலையும் புரிந்து கொண்டு, கவி பாடும் புலமை மிக்க கவிஞரா யும் இருந்த இவ்வம்மையாரை நாம் போற்ற வேண்டும் அன்றோ? இவ்வம்மையாரைப் போற்றுவது போலவே தொழிலை மேற் கொண்டு, புலமையும் பெற்ற ஆண்பாற் புலவர் களையும் போற்ற வேண்டாவா? ஆம், போற்று தல் வேண்டும்; பாராட்டுதல் வேண்டும். இவ்வாறு போற்றுதலும் பாராட்டுதலும் மட்டும் போதா. நாமும் எத்தொழிலைச் செய் தாலும் எந்நிலையில் இருந்தாலும், நன்கு கற்றுக் கவி பாடும் திறமை பெற்றுப் பேரும் புகழும், சீரும் சிறப்பும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்தல் வேண்டும்.

## பயிற்சி வினாக்கள்

1. சித்தலைச் சாத்தனார் என்ற பெயர்க்குரிய காரணங்கள் யாவை?
2. சித்தலைச் சாத்தனாருக்குத் திருவள்ளுவரிடத்தி லும் திருக்குறளிடத்திலும் பெருமதிப்பு உண்டு என்பதைப் புலப்படுத்துக.
3. சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறனைப் பற்றி நாம் அறிவன யாவை?
4. உறையூர் மருத்துவன் தாமோதரனார் என்ற பெயரைக் குறித்து நாம் அறியக் கூடியவற்றை அறிவிக்க.
5. சோழன் குராப்பள்ளித்துஞ்சிய பெருந்திருமாவள வனைப் பற்றியும் பிட்டங்கொற்றனைப் பற்றியும் மருத்துவன் தாமோதரனார் அறிவிப்பன யாவை?
6. கணியன் பூங்குன்றனார் பாடல்களால் நாம் அறி யும் கருத்துக்கள் யாவை?
7. 'தமிழ்க்கூத்து' என்னும் தலைப்பின்கீழ் ஒரு கட் டுரை எழுதுக.
8. வண்ணக்கன் என்னும் சொல்லைக் குறித்து அறி வன யாவை?
9. வடமவண்ணக்கன் பெருஞ்சாத்தனாரால் பாடப் பட்ட இரு மன்னர் யாவர்? அவர்களைப்பற்றிய வாழ்க்கைக் குறிப்பையும் எழுதுக.
10. பேரி சாத்தனார் யாரைப் பாடினர்? அவ்வாறு பாடப்பட்டவனுடைய இயல்புகளையும் குறிப் பிடுக.
11. 'மாவண் ஈகைக் கோதையும் மாறுகொள் மன்ன ரும் வாழியர்!' என்று வாழ்த்தியவர் யாவர்? இவ்வாறு வாழ்த்தியதன் கருத்தையும் புலப் படுத்துக.

12. 'நடுகல்' என்னும் தலைப்புத் தந்து ஒரு கட்டுரை எழுதுக.

13. தண்கால் பூட்கொல்லனார் என்பவர் பெயரை ஆராய்ந்து அவரால் பாடப்பட்டவரின் சிறப்பு களையும் புலப்படுத்துக.

14. பக்குடுக்கை நன்கணியார் சோதிடரும், ஞானி யரும் ஆவர் என்பதை நிறுவுக.

15. பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெரு வழுதியைப்பற்றி அறிந்ததை எழுதுக.

16. கண்ணம்புகுந்தாராயத்தனார் பெயர்க்காரண தைப் புலப்படுத்துக.

17. ஆலியார் பாடலால் நாம் அறிவன யாவை ?

18. மதுரை, உறையூர், திருவாலி, தண்கால் என் னும் ஊர்களைப்பற்றிக் குறிப்புத் தருக.

19. விறலியாற்றுப்படை, மூதின்முல்லை, வாயுறை வாழ்த்து, மகட்பாற்காஞ்சி இவற்றைப் பற்றி சிறு சிறு குறிப்புத் தருக.

20. உறந்தையின் சிறப்பை ஒரு கட்டுரையா எழுதுக.

21. போரவைக்கோப்பெருநற்கிள்ளியின் வீரத்தை புலப்படுத்துக.

22. காவற்பெண்டு புலவரும் ஆவர் என்பதை விளக்குக.

23. புறநானூறு வீரமும் தீரமும் வ விக்கும் நூல் என்பதை எங்ஙனம் நிறுவுவா

24. 'தொழிலும் புலமையும்' என்னும் தலைப்பினை கொண்டு ஒரு கட்டுரை எழுதுக.